விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- எட்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | புரட்டாதி 18 | திங்கட்கிழமை | 04.10.2004 | தொலைபேசி - 2223378 | ஒலி 290

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

கொழும்பு நகருக்குள் நுழையும் வாகனங்களுக்கு வரி அறவீடு!

ஜனாதிபதியின் பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

கொழும்பு நகரினுள் பிரவேசிக்கும் சகல வாகனங்களுக்கும் வரிஅறவிடும் புதிய பிரேரணை ஒன்றை ஜனாதிபதி முன்வைத்துள்ளார். இப்பிரேரணைக்கு அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது. தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் டி.எம்.ஜெயரட்ன இத்தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் கொழும்பு நகரினுள் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்பொருட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

இதனால் எரிபொருள் நுகர்வைக் குறைக்கமுடியும். மேலும் பொதுமக்கள் தமது சொந்த வாகனங்களைக் கொழும்பிற்குள் கொண்டுவருவதை குறைக்கும் பொருட்டு அரசாங்கம் ஆடம்பர வாகனங்களை புதிதாக நகரினுள் அறிமுகப்படுத்தவுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பு நகருக்குள் நுழையும் வாகனங்களுக்கு வரி அறவிடும்திட்டம் அமுல்படுத்தும் திகதி குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. வரிவசூலிப்புத் தொடர்பாக ஆராய்வதற்கு புதியகுழுஒன்றை நியமித்துள்ளோம். சில அமைச்சர்கள் இந்த வரிவசூலிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதனால் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும் என்று அவர்கள் கூறினர். கொழும்பு நகருக்குள் வரும் வாகனங்கள் சோதனை நிலையத்தில் சோதனையிடப்பட்டு வாகனத்தின் வருகை தேவையான விடயம் பற்றி பதிவு செயயப்படுமென போக்குவரத்து (08 ஆம் பக்கம் பார்க்க)

ஆலோசனை சபையை ஐ.தே.கட்சி புறக்கணிப்பது கவலையளிக்கிறது

மீள் பரிசீலனை செய்யுமாறு ரணிலுக்கு ஜனாதிபதி கடிதம்

(நமது நிருபர்)

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும்போது அது தொடர்பான முன்னேற்றங்களையும், சமாதான செயற்பாடுகளையும் நாட்டு மக்களுக்கு அவ்வப்போது தெளிவுபடுத்தும் நோக்குடனேயே சமாதானத்திற்கும், நல்லெண்ணத்திற்குமான தேசிய ஆலோசனைசபை நிறுவப்படவுள்ளது.

அதில் தாங்களும், தங்கள் கட்சியும் பங்குகொள்ளாமை குறித்து மிகுந்த வேதனையடைகின்றேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கவலை தெரிவித்துள்ளார். (8 ஆம் பக்கம் பார்க்க)

படையினர் தாக்குதல் மக்கள் ஆர்ப்பாட்டம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை வியாபாரிமூலையில் வைத்து படையினரால் தாக்கப்பட்ட இளைஞர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வியாபாரிமூலைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் இருவர் தமது மோட்டார் சைக்கிளில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறையடுத்து அதனை படைமுகாம் பகுதியில் நிறுத்தினர். இதனால் அவர்கள் இருவரையும் படையினர் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலில் பாதிக்கப்பட்ட இளைஞன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து முகாம் பகுதியில் (08 ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதியின் பதில் கிடைக்காததால் கவலையடைகின்றார் ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

ஜனாதிபதியால் இன்று அங்குரார்பணம் செய்து வைக்கப்படவுள்ள தேசிய ஆலோசனை சபையின் தொடர்பான விளக்கங்களைப் பெறுவதற்காக ஜனாதிபதியை நேரில் சந்திக்க விருப்பம் தெரிவித்திருந்த போதும், ஜனாதிபதி இதுவரை பதில் எதனையும் அனுப்பவில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கவலை தெரிவித்துள்ளது.

ஆலோசனைசபைக் கூட்டத்தில் பங்கேற்குமாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கு ஜனாதிபதி செயலகத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கு பதிலளித்திருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம், சம்பந்தப்பட்ட ஆலோசனை சபைத் தொடர்பாக தாம் மேலதிக விளக்கங்களை பெற்றுக்கொள்ளவேண்டும். (08 ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதியின் ஆலோசனைச் சபையை இ.தொ.காங்கிரஸும் நிராகரிக்கின்றது

வெளிநாட்டிலிருந்து ஆறுமுகன் தொண்டமான் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் தலைமையில் இன்று நடைபெறவுள்ள தேசிய ஆலோசனை சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதில்லை என இ.தொ.கா. தீர்மானித்துள்ளது.

வெளிநாட்டில் தங்கியிருக்கும் ஆறுமுகன் தொண்டமான் மேற்படி கூட்டத்திற்கு ஒரு பிரதிநிதியையேனும் அனுப்பவேண்டாம் எனக் கட்சிப் பிரமுகர்களுக்கு தொலைபேசிமூலம் அறிவித்துள்ளார்.

தேசிய ஆலோசனை சபைக் கூட்டத்தில கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி சகல கட்சிகளையும் அழைத்திருந்தார். விடுதலைப் புலிகளுடன் சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்கும் நோக்குடன் இச்சபை ஆரம்பிக் (08 ஆம் பக்கம் பார்க்க)

ஆலோசனைச் சபை கூட்டம் இன்று

எதிர்கட்சியின் ஆதரவு கிடைக்காத நிலையில் தேசிய ஆலோசனைச்சபை ஜனாதிபதினால் இன்று திட்டமிட்டபடி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஐக்கியதேசியகட்சி, மலையக மக்கள் முன்னணி, மேல்மாகாண மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் தாம் இவ் ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொள்ளப்போதில்லை (08 ஆம் பக்கம் பார்க்க)

வட-கிழக்கு மனித உரிமைகள் குழுவினர் ச.செ. சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு

சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமை வகிப்பார்

(ஜெனிவா)

ஜெனிவாவில் தங்கியுள்ள சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினரும், தமிழர் தாயகத்தின் மனிதஉரிமைகள் அமைப்பினரும் இன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளையும், சுவிற்சர்லாந்து பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இக்கலந்துரையாடலின் போது, இலங்கையின் தற்போதைய அரசியல் விவகாரம் மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான தடங்கல்கள் பற்றியும், மனித உரிமை மீறல்கள் கொடர்பாகவும், மனிதாபிமான உதவிகள் தொடர்பாகவும் ஆராய்ப்படவுள்ளன.

இதேவேளை தற்போது ஜெனீவாவில் தங்கியுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினருடன் தமிழீழ தாயகத்திலிருந்து சென்ற மனிதஉரிமை (08 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

செய்தித் துளிகள்

வினா-விடை போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தினரும் தென்மராட்சி கல்வி வலயத தினரும் இணைந்து சமய, வர்த்தக , விவசாய மாணவர்களிடையே நடாத் தும் வலய மட்ட இறுதிச் சுற்று வினா-விடைபபோட்டி இன்று திங்கட் கிழமை காலை 9.00 மணிக்கு சாவ கச்சேரி இந்துக் கல்லூரி மண்டபதில் நடைபெறவுள்ளது.

எனவே தெரிவு செய்யப்பட்ட மாண வர்களை தவறாது கலந்துகொள்ளும் படியும் வலயக கல்விபபணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.

வெற்றியாளர்களுக்குரிய பரிசில் களை சாவகச்சேரியில் லயன்ஸ் கழ கத்தினர் வழங்கவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ற-29)

ஆசிரியர் தினம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர் தினம் நாளை செவ்வாய்க்கிழமை பிப 2.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் கொண்டாடப் படவுள்ளது.

இந் நிகழ்வில், ஆசிரியர்களது கலை நிகழ்சிகளுடன் அண்மையில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான பொது அறிவுப் போட்டியில வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களும் சான்றி தழ்களும வழங்கப்படவுள்ளன. (ற-29)

கௌரவிப்பு விழா

(கோண்டாவில்)

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், அங்கத் துவ சங்கங்களும் இணைந்து அண் மையில் ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையா ளர் சுபையா-கணேசமூர்த்தியை கௌரவிக்கும் சேவைநலன் பாராட்டு விழா ஒன்றை இன்று திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்த வுள்ளன.

இந்நிகழ்வு வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டு றவுச் சங்கங்களின் சமாசத் தலை வர் கி.தவராசா தலைமையில் நடை பெறவுள்ளது. (ற-130)

நவராத்திரிவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் நவராத் திரிவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்ப மாகவுள்ளது. (ற)

சவுக்கு மரங்கள் அழிப்பு

(துன்னாலை)

மணற்காட்டுப் பகுதியின் வளம பேணுவோரால் நாட்டப்பட்டு பரா மரிக்கப்பட்ட சவுக்குமரங்களைத் துன்னாலை குடவத்தைப் பகுதியில் உள்ள ஒரு குழுவினர் விறகிற் காகத் தறித்து விற்றுவருகின் றனர்.

இதனைத் தடுத்து நிறுத்தா விடின் அப்பகுதி சவுக்கு மரங்கள முற்றாக அழிந்துவிடுமென அப்பகுதி பொது நல பிரதிநிதிகள் தொவிக் கின் றனர். (க-101)

சூறாவளி அபாயம்

(சுதுமலை)

இந்த வருடமும் இலங்கையில் சில பகுதிகளில் சூறாவளியின் தாக்கம் ஏற்படக்கூடும் என வளி மண்டலத திணைக்களங்களின் பணிப்பாளர் நாயகம் சகல மாவட்ட வளிமண்டலத் திணைக்கள பொறுப் பதிகாரிகளுக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இலங்கையில் 1978ஆம் ஆண்டும் 2000ஆம் ஆண்டும் சூறாவளி மற் றும் அதிகூடிய மழைவீழ்ச்சியால் பாரிய அபாயங்கள் ஏற்பட்டு பல கோடி ரூபா பெறுமதியான நட்டம் ஏற்பட்டது.

இவ்வருடமும் இவ்வாறான சூறாவளி ஏற்படுவதற்கான அறி குறிகள் தென்படுவதால் விழிப் பாக இருப்பது அவசியம் எனவும் அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ற-252)

பட்டினிக்கு எதிரான நிறுவனம் உதவி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஜே/30, ஜே/31,ஜே/ 29 ஆகிய கிராம சேவையாளர் பிரிவில் வாழும வறிய மற்றும் விதவைக் குடும்ங்களுக்கு விவசாயம் கோழிவளர்ப்பு, காலநடைவளர்ப்பு, பண்ணை வேலை ஆகிய தொழில் முயற்சிகளுக்குத் தேவையான உத விகளை பட்டினிக்கு எதிரான நிறுவ னம் வழங்கி வருகின்றது.(ற-126)

இடமாற்றங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் செபரம்பர் 10ஆம் திகதி வெளியிடப பட்ட 2005ஆம் ஆண்டிற்குரிய எழுது நர்களுக்கான இடமாற்றக் கட்ட ளைகளின் பிரகாரம் யாழ்ப்பாணம மாநகர சபையில் கடமையாற்றும் திருமதி ஜி.லோகேஸ்வரன் நல் லூர் பிரதேச சபைக்கும், திருமதி மகாலக்சுமி மகாலிங்கம் வேல ணைப் பிரதேச சபைக்கும்,வை. புவ னேந்திரா வவுனியா நகரசபைக் கும், திருமதி ச.ரசிதா வலி.தென் மேற்கு பிரதேச சபைக்கும் இடமாற் றம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் வவுனியா நகரசபை யில் கடமையாற்றும் ப.விஜயலட் சுமி, வேலணைப் பிரதேச சபை யில் கடமையமாற்றும் திருமதி கரோ லின் றெனோயெஸ்லி, வலி.மேற் குப் பிரதேச சபையில் கடமையாற் றும் செல்வி ம.ஜெகஜனனி, பருத் தித்துறை நகரசபையில் கடமை யாற்றும் செல்வி இ.மதிருபா ஆகி யோர் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ் இடமாற்றம் 01.01.2005ல் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ற-47)

ஊழல்மோசடிகளில் பிரதிஅமைச்சர்கள்?

(கொழும்பு)

சில அமைச்சர்களுக்கும் பிரதி அமைச்சர்களுக்கும இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக சிங்கள பத் திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள் ளது. குறிப்பிட்ட ஒரு சில அமைச் சுக்களின் பிரதி அமைச்சர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதாக சம்பந்தப் பட அமைச்சர்கள் குற்றஞ்சாட்டியுள்ளது டன் அது குறித்து இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் முறை யிடப் போவதாக தமது பத்திரிகைக்கு தெரிவிததுள்ளதாகவும் அந்தப் பத் திரிகையில் மேலும் குறிப்பிடபபட் டுள்ளது. (க)

தமிழ்த்தின விழா

(பொன்னாலை)

கைதடி-விக்னேஸ்வரா வித்தியா லய தமிழ்த்தின விழா இன்று திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு பாட சாலை மண்டபத்தில் அதிபர் துயால சுந்தரம்தலைமையில்நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில்,தென்மராட்சி கல்வி வலய தமிழ்மொழிப்பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் க. முருகதாசன் பிரதம அதிதியாகக் கலந்து கொள் ளவுள்ளார். வித்தியாலய மாணவர் களின கலை நிகழ்வுகளும் இதில் இடம் பெறவுள்ளன. (ற-49)

திரைபபடக்கூ. தாபனத்தில் தமிழ்ப் பிரிவு உருவாக்கம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தேசியத் திரைப் படக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டு 32 ஆண்டுகளுக்குப் பின்னர் 'தமிழ்ப் பிரிவு' ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இத் தமிழ்ப் பிரிவு இலங்கைத் தமிழ்ச் சினிமா வளாசியைப் பிரதான நோக்கமாகக கொண்டு இயங்கும். கடந்த வெள்ளிக்கிழமை கூடிய திரைப்படக் கூட்டுத்தாபனப் பணிப்பா ளர் சபைக் கூட்டத்திலேயே மேற் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்ப் பிரி வினால் முதலாவது தமிழ்ச்சினி மாத் திரைப்படம் தயாரிப்பதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

விரைவில் தனிக்கட்டடமொன் றில் இத்தமிழ்ப் பிரிவு , திரைப்படக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் க. தேவ தாசன் பொறுப்பில் இயங்க ஆரம்பிக் கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வோதய சங்கக் கூட்டம் கடந்த மாதம் 29ஆம் திகதி இணைப்பாளர் என்.ஸ்ரீமனோகரன் தலைமையில் நடைபெற்றது. (க-100)

★ ★ ★

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டத்துக்குட் பட்ட பாடசாலைகளில் தரம் 4 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக் கும், அதிபர்களுக்குமான கூட்டம் இன்று திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

யாழ். கல்வி வலய ஆரம்பக் கல்வி பிரிவின் கணிதபடச் செயல் நூல் இக கூட்டத்தில் வெளியிடப்ப டவுள்ளதாகவும்கோட்டக்கல்விப்பணிப் பாளர் தெரிவித்துள்ளார். (ற-79)

தற்காலிக மாற்றம்

(மாதகல்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சங்கானை உப-அலுவல கத்தின் திருத்த வேலைகள் மேற் கொள்ளப்படுவதால் இதன் பணி கள் தற்காலிகமாக அருகில் உள்ள கலாசார மண்டப கட்டடத்தில் நடை பெறுகின்றன.

இவ் அலுவலகத்தில் திருத்த வேலைகள் நடைபெற்று வருவ தால் அவ் வேலைகள் முடியும் வரை கலாசார மண்டபத்திலேயே இவ் அலுவலகம் இயங்குமென்று தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இப்பிரதேச சபையின் சங்கானை பொது நூலகத்தின் கூரைப பகுதிகள் சேதமடைந்தும், உடைந்தும் காணப்படுவதால் வாச கர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந் நூலகப் புனரமைப்பு தொடர் பாக இதுவரை எவ்வித நடவடிக் கைகளும் எடுக்கப்படவில்லையென சுட்டிக்காட்டப்படுகின்றது. (ற-24)

காணிப் பதிவுகளுக்கென விஷேட நடவடிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சி மந்துவில் கிழக்கு மற்றும் மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டம் ஆகிய பகுதி களிலுள்ள மக்களின் நன்மை கருதி காணிப் பதிவுகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

எதிர்வரும் 8ஆம் திகதி வெள் ளிக்கிழமை மந்துவில் கிழக்கு விட்டுத் திட்டத்திலும், எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை படித்த மகளிர் குடியேற்றத் திட்டத் திலும் இக் காணிப் பதிவுகள் நடை பெறவிருக்கிறன. சம்பந்தப் பட்டோர் இதில தவறாது கலந்து கொண்டு பயன்பெறும்படி கேட்கப்பட்டுள் ளது. (ற-127)

செயற்திட்டம்

(சாவகச்சேரி)

யுனிசெவ் அமைப்பினால் முன் னெடுக்கப்படும் தரம்-8ல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கணி தம், தமிழ் ஆகிய பாடங்களுக் கான செயற்திட்டமொன்று எதிர் வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணி முதல் 11 மணிவரை கணித பாடத்திற்கான செயற்திட்டமும் முற்பகல் 11.15மணி முதல் பிற் பகல் 1.15மணி வரை தமிழ் பாடத் திற்கான செயற்திட்டமும் நடை பெறவுள்ளன. (ற-127)

விளையாட்டரங்கு திறப்புவிழா

(வரணி)

வடமராட்சி கிழக்கு வத்தரா யன் பகுதியில் மாவீர் லெப் இசைச் சிட்டுவின் நினைவாக அவரது குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட விளையாட்டரங்கு திறப்புவிழா கடந்த மாதம் 27 ஆம் திகதி நிதித் துறையைச் சேர்ந்த கிதாயகன் தலை மையில் நடைபெற்றது. (க-119)

பயணியின் மூக்கை வெட்டிய நடத்துநர்

(கொழும்பு)

இறங்க வேண்டிய இடத்தில் பஸ்ஸை நிறுத்தாமல் சென்றமை தொடர் பாக எழுந்த வாக்குவாதம் முற்றியதில் குறித்த பயணியின் மூக்கை தனியார் பஸ் நடத்துநர் தன்னிடமிருந்த கத்தியினால் வெட்டிய சம்பவமொன்று கடந்த 29ஆம் திகதி கர்லி வீதியில் பாணந்துறை பொலிஸ் நிலையத் திற்கு அண்மையில் நடைபெற்றுள்ளது.

காயமடைந்த பிரஸ்தாப பயணி பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர சத்திர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

குறித்த பயணி கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கிச் சென்ற தனியார் கடுகதி பஸஸில் சென்று கொண்டிருந்தார்.

பாணநதுறையை பஸ் சென்றடைந்த வேளை, தான் பாணந்துறை பொலிஸ் நிலையத் தரிப்பிடத்தில் இறங்க வேண்டுமென்று கேட்டார். ஆனால், பஸ் நடத்துநர்கள் இருவரும் அதனை ஏற்கவில்லை. கடுகதி வண்டியை அங்கு நிறுத்த முடியாது என்று திட்ட வட்டமாகக் கூறினர்.

இதனால் இவர்களுக்கிடையில் விவாதம் உக்கிரமடைந்தது. உடனே நடத்துநர்களில் ஒருவர் தன்னிடமிருந்த கத்தியொன்றை எடுத்து அந்தப் பயணியின் மூக்கை வெட்டினார்.

குருதி பெருகியதைத் தொடர்ந்து, பஸ் பாணந்துறை வைத்திய சாலைக்கு விடப்பட்டு காயமடைந்தவர் அங்கு இறக்கப்பட்டார்.

இதேவேளை, பாணந்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி அபயகோன் நடத்துநர்கள் இருவரையும் கைது செய்து பாணந்துறை மஜிஸ்திரேட் முன்நிலையில் ஆஜர் செய்தார்.

இதனையடுத்து நடத்துநர்கள் இருவரையும் அடுத்த வாரம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ற-6)

நவம்பரில் சமர்ப்பிக்கப்படவுள்ள

வரவு- செலவுத் திட்டத்திற்கு 182 யோசனைகள் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள முத லாவது 'வரவு- செலவுத் திட்டத் திற்கு 182 யோசனைகள் திறை சேரிக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் வரவு- செலவுத்திட் டத்திற்கு அரசாங்கத்தினை பங் காளிக் கட்சிகளிடம் இருந்தும், வர்த்தக அபிவிருத்திசசபைகளிடம் இருத்தும் மற்றும் பொது அமைப் புகளிடம் இருந்தும் பயனுள்ள 182 யோசனைகள் திறைசேரிக் குக் கிடைத்துள்ளதாக திறை சேரிகளின் செயலாளர் கலாநிதி பி.பீ. ஜயசுந்தர தெரிவித்துள் ளார்.

திறைசேரிக்குக் கிடைத்துள்ள இந்த யோசனைகளை வரவு- செல வுத் திட்டத்தில் உள்ளடக்குவது தொடர்பாக ஆராய்நது வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

பிரதேச செயலாளர் பிரிவுகளில் தகவல் மத்திய நிலையங்கள்

(கொழும்பு)

நாட்டின் சகல பிரதேச செய லாளர் பிரிவுகளிலும் தலா 3 தகவல் மத்திய நிலையங்கள் வீதம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

இதன் முதல் கட்டமாக நா டெங்கிலும் ஆயிரம் தகவல் மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள் ளதாகவும் அவர் கூறினார்.

இம் மாதத்தை தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தும் வகையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தா.

நாட்டு மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தை அதிகரிப்பதற்காக புதிய நூலகங்களை உருவாக்கவும் அவற் றிறகான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-61)

இலவச போசாக்குணவுத் திட்டத்தால் 1,25,000 பேர் பயனடைகின்றனர்

(கொழும்பு)

உலக உணவுத்திட்ட நிறுவனத் தின் நிதியுதவியுடன் வடக்கு- கிழக்கு மாகாண அரசாங்கப் பாட சாலைகளில அமுல்படுததபட்டு வரும் இலவசப் போசாக்குணவு வழங்கும் திடடம் 24 கல்வி கோட் டங்களுக்கு விஸதரிக்கப்பட்டுள்ள தாக வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இத்திட்டத்தின் மூலம் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பாட சாலை மாணவர்கள் பயன் பெறு வதாகவும் அவர் மேலும் தெரிவித்தா.

இதேவேளை இலவச போசாக் குணவுத்திட்டத்தை மேலும் விஸ் தரிப்பது தொடர்பான கலந்துரை யாடல் ஒன்று எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளிக கோட் டத்தில் உள்ள நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற வுள்ளது. (க-61)

காரை. கமநல சேவை நிலையம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது

(காரைநகர்)

காரைநகர் கமநல சேவைகள் நிலையம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

காரைநகர் வலந்தலைச் சந் தியில் விவசாய அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 40 இலட்சம் ரூபா நிதி செல வில் இது அமைக்கப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட மேற் படி கமநல சேவைகள் நிலையத் தை யாழ்மாவட்ட அரச அதிபர் செத் மநாதன் வைபவ ரீதியாக திறந்து வைக்கவுள்ளார்.

யாழ். குடாநாட்டில் 13 வது கேந் திரநிலையமாகத் திறந்து வைக் கப்படவுள்ள இந்நிலையத்தில், காரைநகர் விவசாயிகளின் நலன் கருதி விவசாயத் திணைக்கள உத்தி யோகத்தர்கள், கால்நடை வைத் திய அதிகாரிகள் மற்றும் தென்னை அபிவிருத்தி சார்ந்த உத்தி யோகத் தர்கள் தமது சேவைகளை வழங்கு வர் என யாழ். மாவட்டக் கமநல சேவை உதவி ஆணையாளர் சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காரைநகர் புகுதிக் கான சமுர்த்திவலய, வங்கி அலு வலகங்களும், கமக்காரர் வங்கியும இககட்டத்தில் இயங்க நட வடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-246)

மன்னாரில் பதற்றம் தணிந்தது

(மன்னார்)

மன்னார் பேசாலைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தையடுத்து அங்கு ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதற்குக் கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதையடுத்து அங்கு நிலமை வழமைக்குத் திரும்பியுள்ளது.

வர்த்த நிலையங்க திறக்கப் பட்டு மக்கள் தமது அன்றாட கடமைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை, பொலிஸாரும், படையினரும் தொடர்ந்து பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் மன்னார் பிரதேசத்தை அரசாங்கம் பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப் படுத்தவிருப்பது தொடர்பாக மன்னார் செயலகத்தில் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக் கூட்டத்துக்கு மீன்பிடித் துறை அமைச்சின் செயலாளர் வருகைதந்த போதிலும் மன்னாரில் நிலவிய பதட்டநிலமை காரணமாக மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் இக் கூட்டத்திற்கு சமூகமளிக்கவில்லை.

இதேசமயம் எதிர்வரும் 20 ஆம திகதியும் கொழும்பில் இது தொடர்பான கூட்டம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-8)

இலங்கையில் 16,50,000 பேர் கையடக்க தொலைபேசிகளைப் பயன்படுத்துகின்றனர்

மத்தியவங்கி தகவல்

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளுக்கான உள்ளூர்ச்சந்தை தற்போது மிகவேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது.

16 இலட்சத்து 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட இலங்கையர்கள் தற்போது கைடயக்கத் தொலைபேசிகளை வைத்திருக்கிறார்களென இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருக்கின்றது. இது இலங்கையின் சனத்தொகையில் ஏறக்குறையஒன்பது சதவீதமாகும்.

இத்தொகையானது கடந்த வருடத்தின் இரண்டாவது காலாண்டில் இலங்கையில் பாவனையில் இருந்த கையடக்கத் தொலைபேசிகளின் தொகையுடன் ஒப்பிடும் போது 49 வீதமான வளர்ச்சியாகும்.

தகவல் தொலைத் தொடர்புத தொழில்நுட்பத்தின் அபரிமித வளர்சசி காரணமாக கையடக்கத் தொலை பேசிப்பாவனையானது நாட்டின் பொருளாதாரத்திலும் தற்பொது ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

இதற்கான செலவினம் குறைவானதாலும், அவற்றை இலகுவாக எடுத்துச் செல்லக் கூடியதாக இருப்பதாலும் கிராமப் பகுதிகளில் கைடக்கத் தொலைபேசிகளின் பாவனை அதிகரித்துள்ளது.

இதனால் கிராமிய உற்பத்திப் பொருட்களின் விலைகளை நிர்ணயிக்கவும் இவை பயன்படுத்தப் படுவதாகவும் தொலைத் தொடர்பு அமைச்சின் செயலாளர் சி.மெலியந்த கூறியிருக்கிறார்.

2005ஆம் ஆண்டில் யுத்தத்தால் பாதிகக்ப்பட்ட வடபகுதியில் கையடக்கத் தொலைபேசிகளின் பாவனை பெரிதும் அதிகரிக்குமென தொலைச் தொடர்பு இயக்குநர்களும், இலங்கை மத்திய வங்கி அதிகாரிகளும் எதிர்வு கூறியுள்ளனர்.

இலங்கையில் முன்னணி தொலைத் தொடர்பு நிறுவனமான டயலொக் நிறுவனம் அதன் அடுத்த இரு வருட முதலீடுகளை கிராமப் பகுதிகளிலேயே மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

தமது வாடிக்கையாளர்கள் பழவகைள, காய்கறிகள், தானியங்கள் ஆகியவற்றின் மொத்த விற்பனை விலைகளை விரைவில் தொலைபேசி மூலமே பரிமாறிக் கொள்வார்களென டயலொக் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (க-7)

உலகசந்தையில் எரிபொருள் விலை மேலும் துரிதமாக அதிகரிக்கும்?

உலக சந்தையில் எரிபொருளின் விலை துரிதமாக அதிகரிக்கக் கூடும் என மின்சக்தி எரிசக்தி அமைசசர் சுசில் பிறேம் ஜெயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை சிறுமின்சக்தி உற்பத்தியாளர் சங்கத்தின் வருடாந்த சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையை மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். எரிபொருளின் விலை அதிகரிக்க மாட்டாது. அதனை நாம் ஏன் அதிகரிக்க வேண்டும்? முன்பு 33 ரூபாவாக விருந்த எரிபொருளின் விலை இன்று 50 ரூபாவாக அதிகரித்துள்ளது.

எரிபொருளின் விலை 40 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதற்குத் தேவையான நிதியை திரைசேரியில் இருந்து பெற்றுக்கொண்டால் நாட்டின் அபிவிருத்திக்கும் ஏனையவற்றிற்கும் பயன்படுத்தும் நிதிக்குப் பற்றாக்குறை ஏற்படும்.

ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கும் மக்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தேவைகளை கூடிய அளவு சுயமாகக் குறைத்துக் கொள்ளுதல் நல்லது.

இன்றைய காலத்தில் மின்சாரம தொடர்பாக இரண்டு பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஒன்று மின்உற்பத்தி, இரண்டாவது மூலப்பொருள் பிரச்சினை. இது மின்சார சபைக்கு மட்டும் அல்லாது, பொதுவாக நாட்டையும், நாட்டின் அபிவிருத்தியையும் பாதிக்கும் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டதாகும்.

திட்டங்களை மேற்கொள்ளும் குறிப்பிட்ட காலத்திற்கு தேவையான முறையான தீர்மானங்களை எடுக்காமையே இவ்வாறான பிரச்சினைகளுக்குக் காரண மாகும். இது மின்சார சபை ஊழியர்கள், பொறியியலாளர்கள், நாட்டு மக்களின் தவறினால் ஏற்பட்டவை அல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-121)

அரச துறைகள் குறித்து நல்ல அபிப்பிராயம் இல்லை

(கொழும்பு)

அரச துறைகள் பற்றி பொது மக்களிடம் நல்ல அபிப்பிராயம் இல்லையென விவசாய காணி மற்றும நீர்ப்பாசன அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அரச, அபிவிருத்தி நிர்மான கூட்டுத்தாபனத்தின 33 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அரசதுறைகள் பற்றி பொது மக்களின் இவ்வாறான கருத்துக்கள் நியாயமான்தாகவே காணப்படுகின்றது. போட்டி வர்த்தகத்தின் மூலம் வர்த்தகத்துறையை நிர்வகிக்க முடியுமென்ற அபிப்பிராயம நிலவிய போதும், அந்த நம்பிக்கை தற்போது அற்றுப்போயுள்ளது.

இதனை காஸ் விலையுயர்வு மூலம் அறிந்துகொள்ள முடியும காஸ் விலை போட்டி போட்டுக் கொண்டு அதிகரிக்கப்படுகிறது.

காஸ் விற்பனைத்துறை அரசாங்கத்தின் நிர்வாகத்திலிருந்தால் இந்த நிலையைக்கட்டுப் படுத்தியிருக்க முடியும் எனவும குறிப்பிட்டார். (ற-8)

அசாமில் 3 இடங்களில் குண்டுவெடிப்பு

30 பேர் பலி; 116 பேர் படுகாயம்

(சென்னை)

இந்தியாவின் அசாம் மாநிலத்தின் வெவ்வேறு மூன்று இடங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச சம்பவங்களில் 30 பேர் பலியாகியுள்ளதுடன் 116 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நாகலாந்தின் பயணிகள் நிறைந்த திமாபூர் ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் பயங்கரக் குண்டு வெடித்தது. அசாமிலிருந்து தினசரி பயணிகள் ரயில் இங்குவருவதற்குச் சற்று முன்பே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. இந்த முதல் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 12 பேர் உயிரிழந்ததுடன் 60 பேர் வரையில் படுகாயமடைந்தனர்.

இதில் உயிரிழந்தவர்களில் சிறுவர்களும், பெண்களுமே அததிகமானவர்கள். ரயிலில் செல்வதற்காக பள்ளிச் சிறுவர்கள் காத்திருந்தபோது இக் குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழந்ததால் அச்சிறுவர்களில் பலர் ஸ்தலத்திலேயே பலியாயினர்.

இதுவரை திமாபூரில் மக்கள் நடமாட்டம் மிகுநத கொங்கொங் சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் சக்திவாய்ந்த மற்றொரு குண்டும் வெடித்துள்ளது. திமாபூர் ரயில் நிலையத்தில் குண்டு வெடிப்பு நிகழ்ந்த அதே சமயத்தில்தான் இந்த குண்டுவெடிப்புச் சம்பவமும் நிகழ்ந்துள்ளது. இதில்16பேர் உயிரிழந்ததுடன், சுமார் 40 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்களில் நான்கு பேர் மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் இறந்தனர். காயமடைந்தவர்கள் திமாபூர் மற்றும் அதன் அருகிலுள்ள அரசு மருத்தவ மனைகள், தனியார் மருத்துவமனைகள், இராணுவ மருத்துவ மனைகள் ஆகியவற்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குண்டு வெடிப்புப் பற்றிய தகவல் அறிந்ததும் நாகலாந்து முதல்வர் நெய்பியு ரியோவும் அரச உயர் அதிகாரிகளும் பொலிஸ் அதிகாரிகளும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பார்வையிட்டனர். இந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு பயங்கரவாத அமைப்புக்கள் எதுவும் இதுவரை பொறுப்பேற்கவில்லை எனினும் வட-கிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த தீவிரவாத அமைப்பு ஏதேனும் இதில் சம்பந்தப்பட்டுள்ளதா என்பது குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடாத்தி வருகின்றனர்.

இந்நிலையில், சிராங் மாவட்டத்தில் உள்ள சாந்திபூர் பஜார் பகுதியிலும் நேற்று முன்தினம் காலை 9.15 மணியளவில் நிகழ்ந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 16 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தீவிரவாதிகள்தான் இந்த குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்குக் காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கோக்ரஜார் மாவட்டத்தில் உள்ள நாயசாலி வனப்பகுதி அருகே கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸாருடன் இடம்பெற்ற மோதலில் தீவிரவாதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

குடியரசுத் தலைவருடன் பிரதமர் சந்தித்துப் பேச்சு

(புதுடில்லி)

இந்திய பிரதமர் மன்மோகன சிங் நேற்று முன்தினம் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல்கலாமை குடியரசுததலைவர் மாளிகையில சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நாற்பது நிமிடங்கள்வரை இடம்பெற்ற இச் சந்திப்பின் போது சமபத்தில் இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு தாம் மேற்கொண்ட சுற்றுப்பயணம குறித்தும், ஐ.நா.கூடத் தொடரில் உரையாற்றியமை குறித்தும், குடியரசுத் தலைவருக்கு பிரதமர் மன்மோகன்சிங் விளக்கிக் கூறினார். (ற)

இந்தியச் செய்திகள்

சந்திரனிலிருந்து பூமிக்கு எரிபொருள் 2007 ஆம் ஆண்டில் சாத்தியமாகும்

இந்தியக்குடியரசுத் தலைவர் நம்பிக்கை

(சென்னை)

சந்திரனில் ஹீலியம் வாயு இருக்கிறதா எனக் கண்டறிவதற்கான முயற்சி 2007ல் தொடங்கும் என குடியரசுத் தலைவர் டாகடர் அப்துல்கலாம் தெரிவிததுள்ளார்.

சங்கரம் அமைப்பின் சார்பில செனனை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கில் கடந்த சனிக்கிழமை நடந்த இசை கலாசார நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் பாஸ்டர் மெட்ரிகுலேஷன பள்ளியில் 12ஆம் வகுப்புப் பயிலும் மாணவன் ஒருவனின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

சநதிரனுக்கு 2007 ல் செயற கைக்கோள் அனுப்பப்படும். இதுவரை பூமியின் சுற்றுப பாதையில்தான் செயற்கைக் கோள்கள் செலுததப்பட்டுள்ளன. முதன்முறையாக சந்திரனின் சுற்றுப்பாதையில் புதிய செயற்கைக்கோள் செலுததப்படும். சந்திரனைச் சுற்றியவாறு சந்திரனில் உள்ள நிலப பரப்பு உள்ளிட்ட பூகோள அமைப்புக்களை அச்செயற்கைக்கோள தொலை உணர்வு மூலம் ஆராயும் அச்செயற்கைக் கோளில் இருந்து சிறிய இயந்திரம் ஒன்று சந்திரனில் இறக்கப்படும். சந்திரனில் நிலத்திலும், வாயு மண்டலததிலும் அது அய்வுகளை மேற்கொள்ளும்.

சில கிரகங்களில் ஹீலியம் வாயு இருப்பதாகவும், அது திண்ம வடிவில் இருப்பதாகவும் கருதப்படுகிறது. அதை எப்படி பூமிக்கு எடுத்துவருவது என்பதற்கான திட்டம இப்போதைக்கு நம்மிடம இல்லை. அடுத்த 50 முதல் 100 ஆண்டுகளுக்குள் பூமியில் எரிவாயு, நிலக்கரி போன்ற எரிபொருட்கள் தீர்ந்தவிடும்.

எனவே வேற்றுக் கிரகங்களில் உள்ள ஆதாரங்களை நாடவேண்டியிருக்கும். சூரிய சக்தி, இயற்கை எரிவாயு போன்றவற்றையும் நாடலாம். ஐதரசன் வாயுக்களும் இதில் உபயோகமாக இருக்கும் எனவே வேற்றுக் கிரகங்களில் இருந்து ஹீலியத்தைக் கொண்டுவந்து இங்கு எரிபொருளாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன எனவும் அவர் மேலும் விளக்கமளித்துள்ளார். (ற)

மூட்டு வலிக்கு முடிவு காணலாம்

நாற்பது வயதை நெருங்கி விட்டாலே நாம் அழைக்காமல் விடும் நோய்களில் மிக முக்கியமானது மூட்டுவலி, மூட்டு வலி ஆண், பெண் என்ற பாகுபாடின்றி இரண்டு தரப்பினரையும் தாக்கும் தன்மை கொண்டது. இந்த மூட்டுவலி என்பது என்ன? இது எதனால் வருகிறது? தடுப்பது எப்படி? என்று

பார்க்கலாம்.

மூட்டுவலி என்றால் என்ன

நமது உடலில் 206எலும்புகள உள்ளன. இவ்வெலும்புகளை ஒன்றுடன் ஒன்று இணைத்திருப்பது மூட்டுகள்தான். மூட்டுகளில் இரண்டு வகை உண்டு.

1. அசையும் மூட்டுகள்
2. அசையா மூட்டுகள்

அசையா மூட்டுகளைப் பொறுத்தவரை பிரச்சினையில்லை. ஏனென்றால் அதில் எந்தவிதமான வலியும் தோன்றுவதில்லை. பெரும்பாலும் அசையும் மூட்டுகளதான் இந்த வலித் தொல்லையைத் தோற்றுவிப்பவை மூட்டுவலி என்றால் மூட்டுகளில் ஒருவிதமான வலி இருக்கும். மூட்டுகளில் 'அழற்சி' ஏற்பட்டிருக்குமாயின் வலி மற்றும் மூட்டுகள் உள்ள மேற்தோல் பகுதி சிவந்து காணப்படும் அந்தப் பகுதியில் கைவைத்துப் பார்த்தாலே வெதுவெதுப்பான வெப்பமான உணர்வு இருக்கும் இது தவிர மூட்டைப் பயன்படுத்தும் போது அதாவது அசைக்கும்போது அதிகமான வலி இருக்கும்.

மூட்டுவலி எதனால் ஏற்படும்?

மூட்டுவலி தோன்றுவதற்கு முக்கிய காரணம் மூட்டுகளில் தோன்றும் அழற்சியே. மற்றும் மூட்டுகள் எளிதில் அசைய அம்மூட்டுகளில் பசை போன்ற திரவம் இயற்கையாகவே சுரக்கும். இத்திரவம் எஞ்சினுக்கு கிரீஸ் மற்றும் என்னை எப்படி உதவுகிறதோ அதைப்போல் உதவி, மூட்டுகளின் சிரமததை இலகுவாக்குகிறது. இதனால் மூட்டுகள் ஆரோக்கியமாக இருக்கின்றன. இத்திரவம் குறையுமேயானால் எலும்புகள் நேரடியாக உரச ஆரம்பித்து மூட்டுகள் தேய்ந்து விடவும் வாய்ப்புள்ளது. எனவே இந்த மூட்டுவாத நோய் தோன்றுகிறது இதனால் வலி தாங்க முடியாத அளவிற்கு ஏற்படுகிறது.

மூட்டு [illegible]யைத் தடுப்ப[illegible] எப்படி

வருமுன் [illegible]பது வந்தபின் குணமாக்கு[illegible]தை விடச் சிறந்தது ஆகவே மூட்டுவலியைத் தடுக்க உடல் எடையைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். ஏனெனில நமது எடையை தாங்கி உடலை அசைய வைப்பது மூட்டுகளே.

படிக்கட்டுகள் ஏறும்போது மிகவும் கவனமாக ஏறவேண்டும. வேகமாகவோ அல்லது படிகளில் ஓடும் போதே மூட்டுகளில் சுற்றியுள்ள சவ்வு பாதிக்கக்கூடும்.

நடைபயிற்சி மூட்டுகளில் திரவத்தை சுரக்கச்செய்து மூட்டுகளை ஆரோக்கியமாக பாதுகாக்கும். வளையாடும்போது மூட்டுகளுக்கான பாதுகாப்பு முறைகளைக் கையாள்வது அவசியம்.

உணவில் உப்புக் குறைவாக அலலது சரியாகச் சேர்த்துக்கொள்

டாக்டர் வி.எம்.சசிகுமார்

ளுதல் மூட்டைப் பாதுகாக்கும்.

கீரை, காய்கறிகள் மூடுகளைப் பலமானதாக்கும். அளவிற்கு அதிகமான மாத்திரைகள் அலலது முறையான ஆலோசனையில்லாத மருந்துகளைத் தவிர்க்க வேண்டும்.

காலையில் 15லிருந்து 20நிமிடம் மூட்டுகளுக்கென பயிற்சி செய்யுங்கள். மூட்டுவலி பற்றிய கவலையைவிட்டு விடலாம்.

தென்னிலங்கை வீதியோரச் சிறுவர்கள்

விடயத்தில் அரசு கவனம் செலுத்துவதில்லை

அண்மைய ஆய்வில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தென்னிலங்கை சிறுவர்கள் மோசமான பாதிப்புக்களுக்கு உள்ளாகிவருவதாக ஆய்வொன்றின் மூலம் தெரியவருகின்றது.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் இடம்பெயர்ந்து யுத்தத்தினால் சிறுவர்கள் பாதிக்கப்பட்டு பல மோசமான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகினர். ஆனால் போரின் பாதிப்புக்குள்ளாகாத தென்னிலங்கைச் சிறுவர்களும் இவ்வாறான மோசமான பாதிப்புக்குள்ளாகி வருவது இவ் ஆயவுமூலம் தெரியவந்துள்ளது.

வடக்கு-கிழக்கு பகுதிகளிலும் தென்னிலங்கைப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போதே இந்த உன்மை நிலை தெரியவந்துள்ளது.

தென்னிலங்கையில் பெருமளவான சிறுவர்கள் வீதியோரமாக வாழ்ந்துவருகின்றதாகக் கூறும் இந்த ஆய்வு இவர்களில் பெரும்பாலானோர் 10முதல் 16 வயதுக்குட் பட்டவர்களாகவும் அவர்களில் பெரும்பாலானோர் ஆணகள எனறும் சுட்டிக்காட்டுகிறது.

இவ்வாறு உள்ள வீதியோரச் சிறுவர்கள் பாலியல், ரீதியான துஷ்பிரயோகம் மற்றும் போதை வஸ்து பாவனை போன்றவற்றுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் சிறுவர்கள் ஆயுதம் ஏந்திப் போராட முன்வருவதுகுறித்து உலக நாடுகளில் பிரசாரம் செய்யும் இலங்கை அரசாங்கம், தென்னிலங்கையில் ஏராளமான சிறுவர்கள் வீதியோரங்களில் வாழ்ந்து வருவது குறித்து எவவித அக்கறையும் காட்டுவதில்லை. இதுவும் அந்த ஆய்வில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-8)

ஜெயானந்த மூர்த்தி எம்.பிக்கு கொலை அச்சுறுத்தல்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்த மூர்த்திக்கு தேசவிரோதக் கும்பலொன்றினால் தொலைபேசி ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள கிரான் மகாவித்தியாலப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ளக் கூடாது என்றே அவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுகக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பக் கல்வி கற்ற இப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவில், பிரதம அதிதியாக கலந்து கொள்ள பாராளுமன்ற உறுப்பினர் எஸ்ஜெயானந்தமூர்த்தி அழைகக்ப்பட்டுள்ளார். இவருடன் சிறப்பு அதிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களான, பா.அரியநேத்திரன், த.கனகசபை மற்றும் தங்கேஸ்வரி கதிர்காமர் ஆகியோர அழைக்கப்பட்டுள்ள போதிலும் குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு மட்டும் இந்தக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழத் தேசியத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் நீ பரிசளிப்பு விழாவில கலந்து கொண்டால் கொலை செய்யப்படுவாய் என கொலை அச்சுறுத்தல் தனக்கு விடுக்கப்பட்டுள்ளதாக இதனை உறுதிப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி இது பற்றி மேலும் குறிப்பிடுகையில், தேசவிரோதக் கும்பலுடன் தொடரபுடைய இருவருடைய பெயரைக் கூறியே இந்த அச்சுறுத்தல் தனக்கு கடந்த சில நாட்களாக தொடர்ந்தும் விடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். (ற)

டென்மார்க் அரசின் செயற்பாடுகள்

எமது போராட்டத்தை இழிவுபடுத்துகின்றது

திரு[illegible]ல மாவட்ட தமிழ்மக்கள் பேரவை குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் தடைப்பட்டுப் போயுள்ள சமாதானாப் பேச்சுவார்த்தையினை உடனடியாக ஆரம்பிக்க டென்மார்க் அரசாங்கம் எந்தவித அழுத்தத்தி[illegible]ம் கொடுக்கவில்லையென [illegible]ல மாவட்ட தமிழ் மக்கள் பேரவை குற்றஞ்சாட்டியுள்ளது.

மேலும், சமாதானத்தின் பிரதான பங்காளியான தமிழீழ விடுதலைப்புலிகளை ஐரோப்பிய நாடுகள் தடைசெய்ய வேண்டுமென டென்மார்க் அரசு கேட்டிருப்பது தமிழர் போராட்டத்தை இழிவுபடுத்தும் செயலாகும் எனவும் அது தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பேரவை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், தமிழ் மக்களைப் பொறுத்தவரை தென்பகுதியிலுள்ள சிங்களப் பேரினவாத சக்திகளால் திணிக்கப்பட்ட யுத்தத்தையே அவர்கள் எதிர்கொண்டனர். குறுகிய காலத்தில் இந்த யுத்தம் நடைபெறவில்லை. இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே தமிழ் மக்கள்மீது பலவந்தமாக யுத்தம் திணிக்கப்பட்டு வருகிறதே தவிர, யுத்தத்தை அவர்கள் தாமாகவே வலிந்து ஏற்படுத்தவில்லை. பேரினவாதிகளின் அடக்கு முறைக்கெதிராக தமிழ் மக்கள் உரிமைப் போராட்டத்தையே நடாத்தினார்கள். இதனைக் கொச்சைப் படுத்துவது நியாயமற்ற செயலாகும்.

எனவே பேரினவாதிகள் தமிழ் மக்கள் மீது திணித்தது பயங்கரவாதமா? அல்லது திணிக்கப்பட்ட யுத்தத்தை தமிழ் மக்கள் வெற்றிகரமாக முறியடிப்பது பயங்கரவாதமா? என்பதை டென்மார்க அரசாங்கம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அதன் பின்பே இது தொடர்பான கருத்துக்களை டென்மார்க் அரசாங்கம் வெளியிட வேண்டும் எனவும், கேட்டுக்கொண்டுள்ளது. (க-121)

அதிகளவு பெண்கள் தற்கொலை செய்யும் நாடு இலங்கையாம்!

(கொழும்பு)

உலகிலேயே அதிகளவிலான பெண்கள் தற்கொலை செய்து கொள்ளும் நாடுகளில் இலங்கை முதலிடத்தைப் பெற்றுள்ளதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.டரிள்யூ. பத்திரநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில விசேட விரிவுரையாற்றியபோது இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் குறிப்பாக தென்னிலங்கைப்பகுதியில் அதிகம் பெண்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

இலங்கையில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் மிகவும் அதிகரிப்பதாக அண்மையில் ஒஸ்காம் தொண்டு நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தகவல் வெளியிட்டிருந்தமையையும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

(க-121)

29ஆவது பொலிஸ்மா அதிபருக்கான

ஜனாதிபதியின் நியமனக் கடிதம் சந்திரா பெர்னாண்டோவிடம் கையளிப்பு?

(கொழும்பு)

நாட்டின் 29ஆவது பொலிஸ்மா அதிபர் நியமனம் குறித்த ஜனாதிபதியின் கடிதம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30க்கு தனகக் கிடைத்தாக சந்திர பொனாணடோ தெரிவித்தார்.

அன்றைய தினம் காலையில், புதிய பொலிஸ்மா அதிபர் பதவியேற்பு வைப்வம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதான செய்தி ஊடகங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்ததை அடுத்து பல ஊடகங்கள் கிளம்பியிருநதன. முக்கியமாக, குறித்த பதவி வேறு ஒரு மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்படவுள்ளதாக ஒரு வதந்தி பரப்பப்பட்டது.

இதேவேளை, சந்திரா பெனாண்டோ அன்று இரு தடவைகள் ஜனாதிபதி மாளிகைக்குச்சென்று தனக்கான நியமனக்கடிதம்பற்றி விசாரித்திருந்தார். ஆனாலும், கடிதம் தயாரிக்கப்படடிருக்கவில்லை. எவ்வாறாயினும், பி.ப.2.30க்கு தனக்கு கடிதம் கிடைத்தாக சந்திர பெர்னாண்டோ பின்னர் உறுதிசெய்திருந்தா.

இதனிடையே சந்திர பெனாண்டோவுக்குகெதிராக சில உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகள் சில குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதிக்குத் தெரிவித்திருந்தாகவும், இதனால் அவருக்காண நியமனக் கடிதத்தில் கையொப்பமிடுவது ஜனாதிபதியால் தாமதிக்கப்பட்டது என்றும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் மற்றும் சில பொலிஸ் உயர் அதிகாரிகளிடமிருந்து தகவல் வெளியாகியுள்ளது. (ற-6)

'காலங்களை வெல்லும் தலைவர்' நூல் வெளியிட்டு வைப்பு



(சுவிட்சர்லாந்து)

தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் பன்முக ஆளுமையைச் சித்தரிக்கும் ஆங்கில நூல் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் சுவிற்சர்லாந்தில் பேரெழுச்சியுடன் நடைபெற்றது.

'PRABHAKARAN' A LEADER FOR ALL SEASONS (காலங்களை வெல்லும் தலைவர்) என்ற இந்த நூல் வெளியீட்டு விழா சுவிற்சர்லாந்தின் பேர்னர் நகரில் மண்டபம் நிறைந்த மக்கள் மத்தியில் வெளியிட்டுவைக்கப்பட்டது.

இவ்விழாவின் ஆரம்ப நிகழ்வாக தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன் ஏற்றி வைத்தார். சுவிஸ் தமிழர் ஒருங்கினைப்புக்குழு உறுப்பினர் அல்பிரட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழீழ காவல் துறைப்பொறுப்பாளர் ப.நடேசன், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, மட்க்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசலயன், புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் மற்றும் நேரு குணரட்ணம் உரை நிகழ்த்தினர்.

இந்நூலை தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர். ப.நடேசன் வெளியிட்டுவைத்தார். இந்நூல் தமிழீழத் தேசியத் தலைவரின் பன்முக ஆளுமையைச் சித்தரிக்கும் அதிகப்படியான ஒளிப்படங்களைத் தாங்கி வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-121)

வெளிநாட்டு அமைச்சர்களுடன் கதிர்காமர் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கூட்டத் தொடரில் பங்குபற்றுவதற்காக நியூயோர்க் சென்ற வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பல நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அல்ஜீரியா, லாவோஸ், பாகிஸதான், நைஜீரியா, கீயூபா மலேசியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களைச் சந்தித்துப் பல்வேறு விடயங்கள் குறித்தும் இவர் கலந்துரையாடியுள்ளார்.

நாடுகளுக்கிடையிலான பொருளாதாரம் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு குறித்து இச் சந்திப்புக்களின்போது ஆராயப்பட்டன.

அத்துடன், சார்க், ஆசியா நாடுகளின் அமைச்சர்களுக் கிடையிலான சந்திப்புக்களிலும் இவர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-8)

இன்று ஒரு தகவல்

இரு மருத்துவர்கள்

ஒருவருக்கு மிகவும் கவலையாக இருந்தது. ஏனென்றால் உடம்பில் கொழுப்புச்சத்து அதிகமாக இருப்பதாக டாக்டர் கூறிவிட்டாராம். அதாவது இரத்தத்தில் கொலஸ்ட்ரால் அதிகமாக உள்ளதாம். டாக்டரின் ஆலோசனைப்படி உணவுக் கட்டுப்பாடு, தேகப்பயிற்சி எல்லாம் செய்து கொண்டு வந்தார் அதனால் குணமாகிக் கொண்டு வந்தார்.

இந்த சமயத்தில் இவ[illegible] ஊரிலிருந்து வந்தார். இவர் உடற்பயிற்சி செய்து கொ[illegible]டிருந்ததைப் பார்த்து விட்டு [illegible]ன் தம்பி இப்படிக் கையையும் காலையும் உதறிக்கொண்டு இருக்கிறாய்? என்ன விஷயம்?' என்று கேட்டார். இவரும் விஷயத்தைச் சொன்னார். டாக்டர் சொன்னபடியே எல்லாவற்றையும் செய். அதோடு நான் ஒரு வைத்தியம் சொல்கிறேன் அதையும் செய் என்று சொன்னார் பாட்டி.

பாட்டி வைத்தியமா? சரி சொல் என்று அரைமனதுடன் ஒத்துக்கொண்டார் இவர். "வேறு ஒன்றுமில்லை பச்சை வெங்காயம் இருக்கிறதல்லவா? அதில் ஒன்றை தினமும் சாப்பிடு" என்றார். பாட்டி சொல்லைத் தட்டக் கூடாது என்பதற்காக இவரும் தினமும் ஒரு வெங்காயத்தை சாப்பிடடு வந்தார். பாட்டி வைத்தியத்தின் பலனை அதன்பின் தான் உணர ஆரம்பித்தார்.

உணவுக் கட்டுப்பாடுகளாலும் தேகப்பயிற்சியினாலும் எந்த அளவுக்கு குணமடைந்தாரோ அதை விட இரண்டு மடங்கு குணமடைநது விட்டார். சும்மா சொல்லக்கூடாது. வெங்காயமும் வெளைப் பூண்டும் வீட்டில் இருந்தால் இரண்டு டாக்டர்களே வீட்டில் இருப்பது போல் நாம் நினைத்துக்கொள்ளலாம்.

இதைப்பற்றியெல்லாம் நமது வீட்டில் உள்ள பெரியவர்கள் கூறும்போது அதை நம்ப நமக்குக் கஷடமாக இருந்தது. இப்போது மருத்துவ நிபுணர்கள் பலபேர் ஆராய்ச்சி செய்து கொண்டு நிறைய விடயங்களைக் கூறுகின்றனர். வெங்காயமும் வெள்ளைப் பூண்டும் எந்தெந்த வியாதிகளைக் குணப்படுத்துகிறது. எந்தெந்த வியாதியை தடுத்து நிறுத்த உதவுகிறது என்பதைக் கேட்டால் நீங்கள் ஆச்சரியப்பட்டு விடுவீர்கள்.

இதய நோய்கள், புற்றுநோய், இரத்தநாளம் கடினமடைதல், ஜலதோஷம், இரத்த அழுத்தம் எனப் பல நோய்களுக்கு இவையிரண்டும் கைகண்ட மருந்தாக உபயோகப்படுகிறது. இந்த நோய்களுககாக நாம் பயன்படுத்திக்கொண்டு வரும் மற்ற மருந்துகளில் உள்ள தொல்லைகளும் இதில் சுத்தமாக இல்லை.

அதுசரி... வெங்காயத்திற்கும் வெள்ளைப்பூண்டுக்கும் நோயைத் தடுக்கும் அல்லது குணப்படுத்தும் சக்தி எங்கிருந்து கிடைக்கிறது? அவற்றில் அலிஸின் என்ற எண்ணெய்ச் சத்து இருக்கிறது. ஒரேமாதிரியாக எரிச்சலூட்டும் நெடியை கொடுப்பது இதுதான். இந்த எண்ணெய்ச் சத்தில் தான் ஏகப்பட்ட மருத்துவச் சக்தி உள்ளது. ஹம்பர்கைச் சேர்ந்த ஒரு டாக்டர் இதை உறுதிப்படுத்தினார். லூயிபாஸ்டர் என்று ஒரு விஞ்ஞானி இருந்தாரல்லவா? அவர் 1885ஆம் ஆண்டில் வெள்ளைப்பூண்டுக்கு நோய் எதிர்ப்புச்சக்தி உள்ளதென்பதைக் கண்டுபிடித்தார்.

அமெரிக்காவில் ஒரு மருத்துவ நிபுணர் டாக்டர் ரூத்லாங் என்று பெயர். அவர் நிறைய ஆராய்ச்சிகளைச் செய்து பார்த்து விட்டு இரத்த அழுத்தம் அதிகமாக இருப்பவர்கள் சாப்பாட்டில் வெள்ளைப் பூண்டைப் பயன்படுத்திக்கொண்டு வந்தால் இரத்த அழுத்தம் குறையும் என்று சொன்னார். இரத்தம் இறுகிப் போவதைத் தடுத்து இரத்தத்தை நீக்க வைக்கும் சக்தி அஸ்பிரினுக்கு இருப்பது தான் அதற்குக் காரணம் என்று கண்டுபிடித்துள்ளனர் மருத்துவர்கள்.

அதேபோல இரத்தம் இறுகிப் போகாமல் தடுக்கும் சக்தி வெங்காயத்திலும் வெள்ளைப்பூண்டிலும் நிறையவே இருக்கின்றதென்பது ஜப்பானிலும், ஜேர்மனியிலும் நடந்த ஆய்வுகள் மூலம் நிரூபணமாகியுள்ளது. எல்லாவற்றையும விடமுக்கியமாக புற்றுநோயைத் தடுப்பதற்கும் பூண்டு உபயோகப்படும்.

நமது உடம்பில் உள்ள நல்ல திசுக்களை புற்றுநோய் திசுக்களாக மாற்றுவது கார்சினோஜன் என்ற இராசயானப்பொருள். அது உருவாவதை இந்த வெள்ளைப்பூண்டு எப்படியோ தடுத்து நிறுத்தி விடுமாம். ஆனால் அது எப்படி என்பதை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லையாம்.

வெங்காயத்தில் செலினியம் என்ற சத்துள்ளது. இது இரைப்பையில் வரும் புற்றுநோயையும் தடுத்து நிறுத்தி விடுகிறது என்று ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இது தவிர வெங்காயத்தில் உள்ள கந்தகச் சத்து நோய எதிர்ப்பு சக்தியாகவும் பயன்படுகிறது.

நமது வீட்டில் ஒரு மூலையில் இருக்கும் பாட்டியின் வைத்தியத்தை நாம் நம்பவேண்டும் என்றால் வெளியில் எங்கேயோ ஒரு மூலையில் உள்ள நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து நிரூபிக்க வேண்டியுள்ளது. அந்தளவுக்கு நமது பாட்டி மீது நமக்கு நம்பிக்கை.

நமது ஊர்க்காரர் ஒருவர் வெளிநாட்டுக்குப் போனார். போவதற்கு முன்பு வீட்டில் இருந்த பாட்டி நாட்டு மருந்து சிலவற்றை தயாரித்து ஒரு டப்பாவில் போட்டு அவரிடம் கொடுத்து "இதை வைத்துக்கொள் அவசரத்துக்கு உதவும்" என்று சொன்னார். இவர் வேண்டா வெறுப்பாக அதை வாங்கிப் பெட்டியில் வைத்துக்கொண்டார். வெளிநாடு போனார். அங்கே போனவுடன் இவருக்குத தலைவலி. பேசாமல் பாட்டி தந்த மருந்தைப் போட வேண்டியது தானே? இவர் அப்படிச் செய்யவில்லை. அந்த ஊரிலேயே பெரிய டாக்டர் யார் என்று விசாரித்து அவரிடம் போக எண்ணினார்.

அந்த ஊரில் ஒரு பழக்கம் டாக்டரின் வீடுகளுக்கு முன்பாக நீலநிறத்தில் விளக்கு தொங்கவிடுவது. அது என்னவென்று விசாரித்தார். வேறு ஒன்றுமில்லை. டாக்டரிடம் சிசிக்சைக்கு வரும் நோயாளி யாராவது இறந்துவிட்டால் வெளியில் ஒரு நீல விளக்கைத் தொங்க விடவேண்டும். செத்துப் போகும் ஒவ்வொரு நோயாளிக்கும் அடையாளமாக ஒரு நீல விளக்கு. இது இந்த ஊர் சட்டம் என்றனர்.

பரவாயில்லையே என்று நினைத்து இவரும் இந்த ஊரிலேயே மிகவும் குறைவாக நீல விளக்கு தொங்கும் டாக்டர் வீடு எதுவென்று தேடினான். ஒரு வீடு கிடைத்தது. அங்கே வாசலில் ஒரேயொரு விளக்கு தான் தொங்கிக்கொண்டிருந்தது. கிடுகிடென்று உள்ளே சென்று ஊசி போட்டார். காசைக் கொடுத்து வட்டு புறப்பட்டார். புறப்படும முன் அந்த டாக்டரிடம் ஒரு கேள்வி கேட்டார். எவ்வளவு காலமாக நீங்கள் டாக்டராக இருக்கிறீர்கள? என்று. "இன்று காலையில் இருந்து தான் தொழிலை ஆரம்பித்திருக்கிறேன்" என்றார் டாக்டர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சேவை பஸ் கட்டணங்களும் அதிகரிப்பு

(கொழும்பு)

மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவை பஸ கட்டணங்களும் இன்று முதல் அதிகரிக்கப்படவுள்ளது.

தனியார் பஸ் கட்டணங்களுடன் மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ்களின் கட்டணங்களை [illegible]ப்படுதும் நோக்கில இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவதாக போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கலாநிதி டி.எஸ். ஜயவீர தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலைகள் அதிகரித்துள்ளதால் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் இல்லாவிட்டால் போக்குவரத்துச் சேவையை நடத்துவதில் பெரும் சிரமங்கள் ஏற்படும் என்று குறிப்பிட்ட அவர், கீட்டணங்கள் அதிகரிக்கப்படாது விட்டால் அதனால் ஏற்படும் நட்டங்களை அரச [illegible]கமே பொறுப்பேற்க வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் குறைந்த பட்ச கட்டணம் 4 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 5 ரூபாவில் இருந்து 24 ரூபாவரையான கட்டணங்கள் ஒரு ரூபாவாலும்,24 ரூபாவிலிருந்து 44 ரூபா வரையிலான கட்டணங்கள் 2 ரூபாவனாலும், 44ரூபாவிலிருந்து 65 ரூபா வரையிலான கட்டணங்கள் 3 ரூபாவினாலும், 65ரூபா முதல் 90 வரையிலான கட்டணங்கள் 4 ரூபாவினாலும், 90 ரூபாவிலிருந்து 100 ரூபா வரையிலான கட்டணங்கள் 5 ரூபாவினாலும்,120 ரூபாவிலிருந்து 160 ரூபா வரையிலான கட்டணங்கள் 6 ரூபாவினாலும், 160 ரூபாவுக்கு மேற்பட்ட கட்டணங்கள் 7 ரூபாவினாலும் அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

(க)

பேச்சை மீள ஆரம்பிப்பதில் ஜனாதிபதி காட்டும் அக்கறையை பாராட்ட வேண்டும்

அமெ.இராஜாங்க திணைக்கள பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும ஆரம்பிப்பதில் நாட்டின் தலைவி என்ற வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க காட்டி வரும் அக்கறையை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் பாராட்டுவதாக இத் திணைக் களத்தின் பேச்சாளர் றிச்சேட் பௌஸர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமாதானம ஏற்பட்டு நாடு முன்னேற்றமடைய வேண்டும் என்பதற்காக ஜனாதிபதி முழுமனத்துடன் காட்டி வரும விட்டுக் கொடுக்கும் தன்மையும் பாராட்டத்தக்கதாகும்.

சமாதான முயற்சிகளில் காட்டி வரும் தாமதம் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் பல்வேறு பிரச்சினைகளைக் கொடுக்கும்.

2002 ஆம் ஆண்டு அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரமாணங்களை இருதரப்பினரும் உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். இதில் உறுதியாக இருப்பதன் மூலம் தான் சமாதானத்தை அடையமுடியும்.

இதேவேளை சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி முன்வைத்துள்ள யோசனைகள் இம் முயற்சி தொடர்பில அவரது விட்டுக்கொடுக்கும் தன்மையை வெளிக்காட்டுகின்றது.

எனவே சமாதானப் பேசச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பப்பதில் ஏற்படும் தாமதம் இலங்கை மக்களால் குறிப்பாக தமிழ் மக்களால் ஆவலுடன் எதிர்பார்க்கும சமாதானத்திற்கான நம்பிக்கையை சிதறடித்து விடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுததுளளார்.

நாட்டில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இருதரப்பினரும் கருத்தொற்றுமைகளை வளர்க்க வேண்டும். இவ்வாறான கருத்தொற்றுமைகள் தான் நாட்டில் சமாதானம் ஏற்படுத்துவதை உறுதிப்படுத்தும். இதனைத் தான் இரண்டு தசாப்த காலமாக நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே இருதரப்பினரும் புரிந்துணர்விணை வளர்த்து உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும என அவர் மேலும் தெரிவித்தார். (க-121)

இராசி பலன்

04.10.2004
(புரட்டாதி 18, திங்கட்கிழமை)
சஷ்டி நள்ளிரவு 12.08 மணிவரை
ரோகிணி மு.ப 11.50 மணிவரை
இராகுகாலம் 7.32- 9.02 மணிவரை
சுபநேரம் 12.02 - 01.32 மணிவரை
கபில சஷ்டி விரதம்

மேடம் பொருள் விரயம், சிந்தனை மிகுதி, காரிய தாமதம், விவாதம்.

இடபம் நல்ல முயற்சி, நண்பர்கள் உதவி, ஜனவசியம், சயன சுகம்.

மிதுனம் பிதா சிந்தை, கோபப்படுதல், பண விரயம், காரிய தாமதம்.

கடகம் தெய்வ சிந்தை, மனமகிழ்ச்சி, புகழ், நல்ல வரவேற்பு.

சிங்கம் கடின உழைப்பு, சுப நிகழ்ச்சி, பிறருக்கு உதவுதல், மேன்மை.

கன்னி ஆன்றோர் மதிப்பு, புதிய திட்டமிடல், வீண் பயம், வயிற்றுக்கோளாறு.

துலாம் வீண் தொல்லை, உடல்நலக் குறைவு, காரிய தடங்கல், வாகனபயம்.

விருச்சிகம் திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, போசன நன்மை, முயற்சி கைகூடும்.

தனுசு சத்துரு ஜெயம், சுகவாழ்வு, உறவினர் சந்திப்பு, காரிய சித்தி.

மகரம் காரிய இடையூறு, மனக்கவலை, அஜீரணக் கோளாறு, பணக்குறைவு.

கும்பம் பயந்த சுபாவம், அற்பர் உறவு, கல்விமில் ஆர்வம், முயற்சி தாமதம்.

மீனம் இனிய அனுபவம், வாக்குமேன்மை, புதிய பொருட் சேர்க்கை, தொழில்விருத்தி.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
— வளவன்

பெருந்தெருக்கள் அபிவிருத்தி திட்டத்தில் பெரும் மோசடி

அமெ. ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தென் பகுதியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 90 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள பெருந்தெருக்கள் அபிவிருத்தித் திட்டத்தில் பெருமளவு மோசடிகள் இடம்பெற்றதாக அமெரிக்க ஆய்வாளர்கள சுட்டிக்காட்டியுள்ளனர்.

தாய்லாந்தில் நீர்முகாமைத்துவத் திட்டத்திலும் இலங்கையில் பெருந்தெருக்கள் அபிவிருத்தித் திட்டத்திலும் மிக அதிகளவில் மோசடிகள் இடம்பெற்றதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

பிரதமர் அலுவலகத்துடன் நெருக்கமான தொடர்புகளைக் கொணடுள்ள ஒப்பந்தகாரர் ஒருவரே இந்தத் திட்டத்தை மேற்கொள்வதாகவும் அவர்கள் மேலும் கூறினார்கள். (க)

சுற்றாடல் சுத்தத்தைப் பேணுமாறு சாவ.நகரசபை வர்த்தகருக்கு அறிவுறுத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில்வியாபாரம் செய்யும் வர்த்தகர்கள் ஒவ்வொருவரையும் சுற்றாடலினை சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும்படி சாவகச்சேரி நகரசபையின் செயலாளரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மழைகாலம் ஆரம்பித்திருப்பதால் நகரில் காணப்படும் கழிவுகளால் தொற்றுநோய்கள் பரவும் வாய்ப்பு இருப்பதால் இவ்வாறான கழிவுகளை அகற்றுவதற்கு நகரசபையுடன் ஒத்துழைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

★வர்த்தகர்கள் நாளாந்தம் தங்களது வியாபாரக் கழிவுப் பொருட்களை ஒரு பையிலோ அல்லது சபையால் வைக்கப்பட்டுள்ள குப்பைத் தாங்கிகளில் இட்டோ தமது வியாபார நிலையச் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். இவ்வாறு சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களை நாளாந்தம் அகற்றுவதற்கு சபையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

★தேநீர்ச் சாலைகள், ஹோட்டல்கள் என்பவற்றில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை வடிகால்களுக்குள் இடாமல நகரசபையால் வைக்கப்பட்டுள்ள குப்பை தாங்கிகளில் சேர்க்கப் படவேண்டும்.

★மீன் சந்தையில் தினமும் சேரும் கழிவுளை அங்கு வைக்கப்படடுள்ள குப்பை தாங்கிகளில் இடுதல் வேண்டும்.

மேற்படி மூன்று நடைமுறைகள் குறித்தும் சாவகச்சேரி நகரசபையால் வர்த்தகர்கள் ஒவ்வொருவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளக. (ஈ-127)

உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி 3 வருடங்களாக நீடிக்கப்பட்டுள்ளது

யாழ்.பல்கலைக்கழக உடற் கல்வி டிப்ளோமா கற்கைநெறி, இரண்டு வருடத்திலிருந்து மூனறு வருடகால கற்கை நெறியாக தரம் உயர்ததப்பட்டமையினை கல்விச் சமூகத்திற்கு தெரியப்படுத்தவும் இக்கற்கை நெறியை மேற்கொண் டவர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுத்தருமாறு சமபந்தப்பட்டவர் களுக்கு கோரிக்கை விடுக்கவும் யாழ.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான மாணவர் ஒன்றியத்தி னால் அறிக்கையொன்று வெளி யிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையின் விபரம் வருமாறு:-

தமிழ்த்தேசியத்தின் நன்மை கருதி விளையாட்டுத்துறையை அபிவிருத்திசெய்யும் நோக்குடன் 1998ஆம் ஆண்டு ஒக்டோபர் 12ஆம் திகதி முதன்முதலில் யாழ்.பல் கலைக்கழகத்தில் இரண்டு வருட உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறி முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளையால் ஆரம்பிக்கப்பட்டது.

இத்துறையை ஆரம்பிப்பதற்கு மூதவைப் பேரவை உறுப்பினர் களும ஆதரவு வழங்கியிருந்தனர். ஆரம்ப வைபவத்தின் போதே முன் னாள் துணைவேந்தர் இத்துறை வேலைவாய்ப்புக்குரியதென்றும் இதற்கான விரிவுரைகள் விரை வில் ஆரம்பிக்கப்படும் எனவும் கூறியிருந்தார்.

ஆறு வருடங்கள் கடந்தும் இரண்டு வருட கற்கை நெறிதான் பூர்த்திசெய்யப்பட்டிருக்கிறது. இக் கற்கை நெறியைப் பூர்ததிசெய்து வெளியேறிய நான்கு வருட மாண வர்கள் எந்தவிதமான நன்மை யினையும் இதுவரை பெற்றுக் கொளளவில்லை. இது அவர்களது எதிர்காலத்தைக் கேள்விக்குறி யாக்கியுள்ளது. இத்தருணத்தில் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் உடற்கல்வித்துறையை மருத்துவ பீடத்தின் கீழ் இயங்க ஆவன செய்திருக்கிறது. அதற்கமைய மருத்துவபீடத்தின் கீழ் இயங் கும்போது உடற்கல்வித்துறை விளையாட்டு விஞ்ஞான அலகாக பெயர் மாற்றம் செய்யப்படடது. எனவே இது இத்துறையை பொறுத் தவரையில் ஆரம்ப கட்டவளர்ச்சி என்றே நாம் கருதுகின்றோம்.

யாழ்.மாவட்ட மாணவர்கள் மட்டுமன்றி ஏனைய வெளி மாவட் டங்களைச்சேர்ந்த அதிகளவான மாணவர்களும் இக்கற்கை நெறி யினை பல்வேறு சிரமங்களுக்கும் மத்தியில் தொடர்ந்த வண்ணம் உள்ளார்கள். இம் மாணவர்களின் எதிர்காலமும் இக் கற்கை நெறிக் குரிய வேலைவாய்பின்மையால் கேள்விக்குறியாகவே இருக்கின் றது.

இதனைக் கருத்திற்கொண்டு மாணவர்கள் எதிர்கால நன்மை கருதியும் அன்றாட வாழ்வில் இன்னல்பட்டுக்கொண்டிருக்கும் கல்வி கற்று வெளியேறிய மாணவர்கள நன்மை கருதியும் குருதியை வியர் வையாக்கி வேலைவாய்ப்பு என்ற கொள்கையுடன் கல்வியைக் கற் றுக்கொணடிருக்கும் மாணவர்களின் எதிர்பார்ப்புபினை பூர்த்திசெய்யக் கூடிய வகையிலும் இக் கல்வித் தரத்தினை தரம் உயர்த்தும்படி 2002-2003ஆம் கல்வி ஆண்டு விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர் ஒன்றியம் இணைப்பாளர், பீடாதிபதி ஊடாக துணைவேந்த ருககுக் கடிதம் மூலம் கோரிக்கை விடுததுள்ளது. எனவே இக் கோரிக் கைக்கு எற்ப மாணவர்களின் எதிர் கால நன்மைகருதி யாழ்.பல்கலைக் கழக நிர்வாகம் சாதகமான முடி வினை மிகக் குறுகிய காலத்தில் பெற்றுத் தந்திருந்ததனையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

அதாவது, ஏற்கனவே இருந்த இரண்டு வருட உடற்கல்வி டிப் ளோமா மூன்றுவருட உயர் உடற் கல்வி டிப்ளோமாவாக தரம் உயர்த் தப்படடிருக்கிறது. இச் சாதகமான பதிலை மிகவும் குறுகிய காலத் தில் எடுப்பதற்கு அரும்பாடுபட்ட துணைவேந்தர் மருத்துவ பீடாதி பதி, விளையாட்டு விஞ்ஞான இணைப் பாளர், யாழ்பல்கலைக்கழக நிர்வாகத் தினருக்கும் என்றென்றும் விளை யாட்டு விஞ்ஞான மாணவர் ஒன் றியம் பாராட்டுவதோடு தனித்தனி நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளது. இத்துறை இத்துடன் நின்றுவிடாது மேலும் உயர் கல்வியாக (DE GREE) விருத்தியடைய அனைத் துக் கல்விமான்களின் பணிகள் தொடர வேண்டும் என பணிவாக வேண்டுகின்றோம்.

எமது இத்துறை தொடர்பாக சென்றவாரப் பத்திரிகையில் வெளி யான செய்தியையிட்டு ஆழ்ந்த கவலையையும் துயரமும் அடை கின்றோம். ஏனெனில் மக்கள் மாண வர்களது பிரச்சினையை முறை யாகத் தீர்ப்பவர்களுள் அரச அதி பரும் முக்கியமானவர் ஆவார். அவரே எமது துறையைப்பற்றிக் கருத்துக கூறுகையில் யாழ்.பல் கலைக்கழக இரண்டுவருட உடற் கல்வி டிப்ளோமா வேலை வாய்ப் புக்குத் தகுதியற்றது என்று பகிரங் கமாக அறிவித்திருக்கின்றார்.

எனவே தற்போது எமது கற்கை நெறி தரம் உயர்த்தப்பட்டிருக் கின்றது. என்பதை அறியத்தருகின் றோம். அதாவது இரண்டு வருட உடற் கல்வி டிப்ளோமா மூனறுவரு உயர் உடற்கல்வி டிப்ளோமாவாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே அரச அதிபர் உட்பட சம்பந்தப் பட்ட அதிகாரிகள் அனைவரும் எமது மாணவர்களின் துயரினை தீர்ப்பதற்கும் தமிழ்த் தேசியத் தின் விளையாட்டுத் துறையை வளர்ப்பதற்கும் எமக்கு வேலை வாய்ப்பு வழங்குமாறு அதறகு வேண்டிய நடவடிக்கைகளை எடுக் குமாறும் கோரிக்கை விடுக்கின் றோம்.

திட்டமிட்டபடி நடைபெறவி ருந்த எமது பரீட்சைகளில தோற் றாது சாத்வீக போராட்டத்தில் ஈடு பட்ட மாணவர்களாகிய எமக்கு சாதகமான முடிவு கிடைத்துள்ளமை யால் நாம் கல்விச் செய்ற்பாடு களினை தொடர்கிறோம் என்பதனை சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதம் மூலம் அனுப்பிவைக்க இருக்கிறோம்.

எனவே சகல முதலாம்வருட, இரண்டாம் வருட மாணவர்களும் இன்று முதல் வெள்ளிவரை (4.10.04-8.10.04) காலை 7மணி முதல் 10மணிவரை எமது வழமையான மருத்துவ பீட மைதானத்தில் செயன்முறைப் பயிற்சி நடைபெறவிருப்பதால் அனைத்து மாணவர்களையும் வருகை தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். (ற-7)

வெலிமடையில் குண்டுவெடிப்பு ஒருவர் பலி

(வெலிமடை)

வெலிமடை ஊவா பரணகம அக் கரை வளைத் தோட்டத்தின் 10 வது பிரிவில் நேற்று முன்தினம இடம் பெற்ற குண்டு வெடிப்பில் ஒருவர் உயிரா இழந்துள்ளார்.

கோபாளன், விபுலானந்தன் என பவரே உயிரிழந்தவர் ஆவார். சம் பவத்தில் ஆனந்தகுமாரன் என்பவர் காயமடைந்து பதுளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்படடுள்ளார்.

தோட்டப் புறத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த போது புதைக்கப்பட் டிருந்த குண்டு ஒன்றின் மீது மண் வெட்டி மோதிய போதே இக் குண்டு வெடிப்பு இடம் பெற்றிருக்கிறது.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முடுக்கி விட்டுள்ளனர்.(க)

மூவிமெண்டோ உதவி

(பொன்னாலை)

வலி- மேற்கு சங்காணைப் பிரதேச செயலா பிரிவில் உள்ள உழைக்கும் தொழிலாளாகளுக்கு தொழில் உப கரணங்களை வழங்குவதற்கு " மூவி மெண்டோ" நிறுவனம் முன்வந்துள் ளது.

இதற்கான ஏற்பாடுகளை வலி- மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ. மோகன் றாஸும் பிரதேச செயலக ஊழியர் களும் மேற்கொண்டுள்ளனர்.

மீன்பிடி, மேசன், மரவேலை மற்றும் விவசாயம ஆகிய தொழில்களை மேற் கொள்பவர்களுக்கே தொழில் உப கரணங்களை வழங்குவதறகு "மூவி மெண்டோ நிறுவனம் முன்வந்துள ளது.

இடம் பெயர்ந்து வாழ்பவர்கள் மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ் பவர்கள் இவ் உபகரண வழங்களில் முன்னுரிமை படுத்தப்படுவர் எனத் தெரிவியவருகின்றது.

(ற-40)

மக்கள் குறை அறியும் முகமாக சுரேஷ் எம்.பி. கிராமங்களுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் மக்கள் குறை அறியும் முகமாக வலி மேற்கு, கொட்டைக்காடு, காரை நகர், தோப்புக்காடு, உரும்பிராய் கிழக்கு மற்றும் ஊரெழு போன்ற கிராமங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களின் குறைகள் சம்பந்தமாகக் கேட்டறிந்தார்.

மேற்குறிப்பிட்ட கிராம மகக ளும், ஊர் தலைவர்களும், பாராளு மனற உறுப்பினரிடம் தமது குறை களை எடுத்துக்கூறினர் அடிப்ப டைத் தேவைகளான குடிதண்ணீர், வீதி வசதிகள், மீன்பிடித்தடை, போக்குவரத்துப் பிரச்சினைகள், வீட்டுப் பிரச்சினைகள, பாடசாலை வசதிகள் மின்சாரம் போன்ற தேவை கள் சம்பந்தமாக மக்கள் பாராளு மன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இதைவிட மக்களுடைய பிரச் சினைகளை அவர் நேரிலும் கண் டறிந்தார். இது விடயம்குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவ னத்திற்கு எடுத்துக்கூறுவதோடு, தன்னாலான முழுச் செயற்பாடுக ளையும் தான் நின்று செயற்படுத் துவதாகவும் மக்களுக்கு உறுதி வழங்கினார்.

இத்துடன், காரைநகர் இலங்கை போக்குவரத்து சபைக்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர், அங்குள்ள அதிகாரிகளிடம் போக்கு வரத்து வசதிகள் சம்பந்தமான விடயங்களைக் கேட்டறிந்ததுடன் தடைப்பட்டுள்ள போக்குவரத்து வசதிகளை முன்னெடுக்க மேற் கொள்ளவேண்டிய அனைத்து வச திகளையும் ஏற்படுத்திக்கொடுக்க ஆவணை செய்யவேண்டும் என் றும் கேட்டுக்கொண்டார். (ற)

போர் நிறுத்த உடன்பாட்டின் பின்னர் வான்படையினருக்கு 15கோடி ரூபா நட்டம்

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்பாட்டின் பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் பிர காரம இலங்கை வான் படையின ருக்கு 15 கோடி ரூபா நட்டம்ஏற்பட்டுள்ள தாக வான் படைத்தரப்பைச் சேர்ந்த உயா அதிகாரி ஒருவர் தெரிவித் துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதி நிதிகள, அரசாங்கப் பிரதி நிதிகள், சமாதானத் தூதுவாகள் மற்றும் இராஜ தந்திரிகள் என்று பல தரப பட்டவர்களையும் பல இடங்களுக்கு ஏற்றிச சென்றமையினாலேயே இத் தகைய நட்டம் ஏற்பட்டதாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

சாமாதான நடவடிக்கைகளுக்காக இதுவரை இலங்கை வான்படை உலங்கு வானூர்திகள் ஆயிரத்து 270 மைல் தூரங்களுக்கு தமது பய ணங் களை மேற்கொண்டுள்ளன. சுமார் 500 பயணங்கள் மூலம் இந் தத் தூரம் கணிப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க)

அரச நிர்வாக சேவைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கை அரசாங்க நிர்வாக சேவைப பதவிகளில் நிலவும் வெற்றி டங்களை நிரப்புவதற்கு அரச நிர்வாக உள் நாட்டலுவல் கள் அமைச்சு நட வடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி இலங்கை நிர்வாக சேவை யின வகுப்பு இரண்டின் தரம் இரண் டிற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள் ளன. இதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுளளதாக அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச் சின் செயலாளர் எஸ். சி. மன்னப் பெரும அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் தமது விண ணப்பத்தினை எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் பரீட் சைத் திணைக்களத்திற்கு அனுப் பிவைக்க வேண்டும். அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இதற்கான போட் டிப் பரீட்சை கொழும்பில் நடை பெறும்.

ஏற்கனவே அரச சேவையில் 10 ஆண்டுகளை நிறைவு செய்தவர்களும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்க ழகம் ஒன்றில் பட்டம் பெற்று அரச சேவையில் 5ஆண்டுகளை நிறைவு செய்தவர்களும் இப்பரீட்சைக்கு விண ணப்பிக்க முடியுமெனவும் மன்னப் பெரும மேலும் தெரிவித்துள்ளார். (க-7)

அம்பாறை மாவட்ட முஸ்லிம் விவசாயிகள் பிரச்சினை குறித்த முத்தரப்புச் சந்திப்பு இன்று

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் வட்டமடு பிரதேசத்தில் முஸ்லிம் விவசாயிகள் விவசாயச் செய்கையில் ஈடுபடுவது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக இன்று முத் தரப்புச்சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

இலங்கை போர் நிறுத்த கண் ணாணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம் பெறவிருக்கும் இச சந்திப்பில் விடுதலைப்புலிகள் மற்றும் முஸ்லிம தரப்பு பிரதி நிதிகளும், சிவில அதிகாரி களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வட்டமடு பிரதேசத்திலுள்ள குறிப்பிட்ட காணி கால்நடை மேய்ச் சல் தரைக்கு ஒதுக்கப்பட்டது என தமிழ் விவசாயிகளும் குறிப்பிட்ட காணிக்கான ஒப்பம் தங்களிடம் இருப் பதாக சம்பந்தப்பட்ட முஸ்லிம் விவ சாயிகளும் கூறி வருவதையடுத்தே இந்தக் காணிப் பிரச்சினை ஏற்பட் டுள்ளது.

அதேவேளை, இந்த காணி தொடர் பாக தீர்மானம் ஒன்று எடுக்கும் பொருட்டு எதிர்வரும் 9 ஆம் திகதி அம்பாறை அரசாங்க அதிபர் தலைமையிலான குழு வொன்று அந்தஇடத்திற்கு நேரில் சென்று இது பற்றி ஆராயவுளளது. (ச)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்வதற்கு ஜே.வி.பியினர் முயற்சி

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்திட்டத்தினை ரத்துச் செய்ய வேண்டும் என அரசுக்கு ஜே.வி.பி.யினர் ஆலோசனை தெரி வித்துள்ளனர்.

இதுதொடர்பான ஆலோசனை எதிர்வரும் வரவு-செலவுத்திட்டத் தில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதன் அடிப்படை யில் அதனை நிதி அமைச்சரிடம் ஜே.வி.பி.யின் பிரதிநிதிகள் அண் மையில் சமர்ப்பித்திருந்தனர்.

1977ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன வினால் நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு 5வருட முழு ஓய்வூதி யத்திட்டம் அமுல்செய்யப்பட்டது.

ஆனால் தற்போதைய நிலை யில் நாட்டின் செலவீனங்களுக்கு மத்தியில் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதி னாலேயே நாடாளுமன்ற உறுப் பினாகளின் ஓய்வூதியத் திட்டத்தை ரத்துச்செய்ய ஜே.வி.பி.விரும்பு கினறதாக அக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் ஒருவர் தெரி வித்தார். (க)

சமுர்த்தி இயக்கத்தினால் புதிய திட்டம் அறிமுகம்

(பொன்னாலை)

இலங்கை சமுர்த்தி இயக்கம் புதிய குடும்ப அபிவிருத்தித் திட்ட மொன்றை நாடு பூராகவும் அறிமு கப்படுத்தவுள்ளது.

வரலாற்றில் முதற் தடவையாக அறிமுகப்படுத்தப்படவிருக்கும் இத்திடடமானது சர்வதேச வறுமை ஒழிப்புதினமான எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வர வுள்ளது.

சமூக பொருளாதார நிலையை மேம் படுத்தும் முகமாக ஆரம்பிக்கப்ப டும் இத்திட்டத்தின் மூலம் சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சமுர்த் திக குடும்பங்கள் நன்மையடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சமூர்த்தி அமைச்சு 30 ஆயிரம் ரூபா வருமானம் தரும் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவரவிருக் கின்றது. இதற்கென சமுர்த்தி அமைச்சு சுமார் 2 ஆயிரத்து 14 மில்லியன் ரூபா நிதியை ஒதுககீடு செய்திருப் பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மீன் பிடி, விவசாயம், கால் நடை, கைத் தொழில் ஆகிய துறைகள் இந்நிதி ஒதுக்கீடடின் மூலம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

சர்வதேச வறுமை ஒழிப்புதின மான எதிர்வரும் 17 ஆம் திகதி இலங் கையிலுள்ள சகல சமுர்த்தி அலுவ லர் பிரிவுகளிலும் இந் நிகழ்ச்சித் திடடம் ஆரம்பித்து வைக்கப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ற-49)

பதவியுயர்வு

(கொழும்பு)

வடகக-கிழக்கு மாகாணசபை யின் கீழ் இயங்கும் அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் உள்ளூ ராடசி மன்றங்களில் கடமையாற்றும் சாரதிகளுக்கு பதவி உயர்வுகளை வழங்குவதற்கு வடக்கு- கிழக்கு மாகாணப பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி சாரதிகள் வகுப்பு- 2 'ஆ' தரத்தில் கடமையாற்றும் சாரதி களுக்கு வகுப்பு 2 'அ' தரத்திற்கும, சாரதிகள் வகுப்பு 2 'அ'தரத்தில் கடமையாற்றும் சாரதிகளுக்கு வகுப்பு -1க்கும் பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளது. (க-61)

எண்ணியார் எண்ணமிழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச்செயின் - குறள்

வலம்புரி

நிலையான கொள்கை முஸ்லிம் கட்சிகளிடம் இருக்க வேண்டும்

ஜனாதிபதியால் அமைக்கப்படவுள்ள தேசிய ஆலோசனைச் சபையில் பங்கேற்பதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரும்பம் கொண்டுள்ளது.

இதனை கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு எழுதிய கடிதம் உறுதிசெய்கிறது. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது என்றபேரில் ஜனாதிபதியால் அமைக்கப்படவுள்ள தேசிய ஆலோசனை சபையில் பங்கேற்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற அரசியற் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டன.

இவ் அழைப்பினை ஏற்றுக்கொள்ள ஐக்கிய தேசியக்கட்சி மறுத்துவிட்டது. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான பேச்சுவார்த்தைகளை அரசு ஆரம்பித்தால் தாம் ஆலோசனை வழங்க முடியுமென அக்கட்சியின் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் தேசிய ஆலோசனைக்குழு தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சி எடுத்த தீர்மானம் சரியானதென்றே கூறவேண்டும்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியிலிருந்தபோது விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றன. அப்பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைக்குச் சாத்தியமற்றதென ஐக்கிய தேசியக்கட்சியோ அன்றி விடுதலைப் புலிகளோ கூறவில்லை.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் - இடைக்கால நிர்வாக சபையை தம்மிடம் ஒப்படைப்பதன் ஊடாக பேச்சுக்களை முன்னெடுக்கமுடியும் என்பது அவர்களின் நிலைப்பாடு.

ஐக்கிய தேசியக்கட்சியும் அதே நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. ஆக, மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட ஓர் அரசாங்கத்திற்கும், தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளாக இருக்கக்கூடிய விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்களின் முடிவுகளில் இருந்து புதிய அரசும் பேச்சை ஆரம்பிப்பதே பொருத்துடையதாகும்.

இதைவிடுத்து தேசிய ஆலோசனை சபையை அமைப்பதன் ஊடாக எந்தவித தீர்மானங்களையும் புதிய அரசு எடுத்துவிடமுடியாது. அவ்வகையில் தேசிய ஆலோசனை சபையில் இடம்பெற முடியாதென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அறிவிப்பு நியாயமானதாகும்.

ஆனால், இதுவிடயத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஓர் நிலையான கொள்கையைக் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகின்றது.

ஆரம்பத்தில் ஜனாதிபதியின் தேசிய ஆலோசனை சபையில் அங்கம்பெற முடியாது எனக்கூறிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இப்போது ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. அக்கடிதத்தில் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

அவ்வாறானதோர் சந்தர்ப்பத்தை ஜனாதிபதி ஏற்படுத்தினால், தேசிய ஆலோசனை சபையில் அங்கம்பெற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருக்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படியானால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் "சிறுபான்மை இனத்தின் உரிமைப் பாதுகாப்பு" என்பதிலிருந்து விலகி தனது கட்சியின் எதிர்காலம் பற்றியே சிந்திக்கிறது என்ற முடிவுக்கு எவரும் வரமுடியும்.

எனவே இத்தகைய குறுகிய சுயநலப் போக்குகளைக் கைவிட்டு ஓர் நிலையான கொள்கையில் இயங்க முஸ்லிம் கட்சிகள் முன்வரவேண்டும்.

பருத்தித்துறை நகரசபை

சொந்த இடத்தில் இயங்குவதற்கு படையினர் தடையாகவுள்ளனர்

(திருநெல்வேலி)

பருத்தித்துறை நகரசபையை அதன் சொந்த இடத்தில் இயக்குவதற்குப் படையினர் தொடர்ந்தும் தடைவிதித்துள்ளனர்.

பருத்தித்துறை நகரசபைக் கட்டடம், வாடிவீடு என்பவற்றை 1995 ஆம் ஆண்டு முதல் படையினர் தம் வசப்படுத்தியதுடன், இதற்குள் 524 பிரிகேட் கட்டளைத் தலைமையகத்தையும் அமைத்துள்ளனர்.

பருத்தித்துறை நகரசபைக் கட்டடமும், வாடிவீடும் கடந்த கால யுத்த நடவடிக்கைகளின் போது மிகவும் சேதமடைந்துள்ளதால், பருத்தித்துறை நகரசபைக்கு என புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிக்கப் பல வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்கள் முன்வருகின்றபோதும் இதற்கென காணி ஒன்று இதுவரை இல்லை. இதனால், சபைக்கான கட்டடப் பணிகளை ஆரம்பிக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து தமது சொந் தக் காணியைத் தம்மிடம் மீள ஒப்படைக்குமாறு 524 ஆவது படைத் தலைமையகத்திடம் பருத்தித்துறை நகரசபையின் செயலாளர் திருமதி திருச்செல்வநாயகம் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையிலும், படைத்தரப்பு இக்கட்டடத்தை விடுவிக்க இணக்கம் தெரிவிக்கவில்லை. இதனையடுத்து பருத்தித்துறை நகரசபையினர் இறுதி முயற்சியாக 524ஆவது பிரிகேட் கட்டளைத் தளபதிக்கு தமது காணியை விடுவிக்குமாறுகோரி மீண்டும் ஒரு மகஜரை அனுப்பியுள்ளனர்.

இதன் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர், பருத்திதுறை உதவி அரசாங்க அதிபர் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேரடியாகப் பருத்தித்துறை நகர சபைக்குச் சென்று நிலைமைகளைக் கேட்டறிந்துள்ளனர்.

இது இவ்விதமிருக்க, பருத்தித்துறை நகரசபை தற்போது தனியார் வீடு ஒன்றில் இயங்கி வருகிறது. இந்த வீட்டை விடுமாறு வீட்டு உரிமையாளர் நகரசபையிடம் கேட்டும் நகரசபை வீட்டை விடுவிக்காத சூழ்நிலையில், வீட்டு உரிமையாளர் பருத்தித்துறை நகரசபைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளமையும் இங்குகுறிப்பிடத்தக்கது. (ற-43)

சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் குறித்து செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் கருத்தரங்கு ஒன்றை நடாத்தியுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா மற்றும் மேலதிக நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரம், சட்டத்தரணிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலமுக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.வதிவிடப் பிரதிநிதி ரெட் றொபேட் இக் கருத்தரங்கை நடத்தினார். இக் கருத்தரங்கில், சர்வதேச மனிதாபிமான சட்டங்கள், கைதிகளது நிலைவரங்கள், 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் யுத்தத்தில் இணைத்துக்கொள்வது தொடர்பான சர்வதேச சட்டங்கள், காணாமல்போனோர் குறித்த விடயங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டப் பரப்புரை ஆகியன குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. (ற-19)

புதிய பொலிஸ்மா அதிபர் இன்று கடமைகளைப் பொறுப்பேற்பார்?

(கொழும்பு)

இலங்கையின் 29 ஆவது பொலிஸ் அதிபர் சந்திரா பெர்னாண்டோ இன்றுமுதல் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

கடந்த வாரம் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற இந்திரா டி சில்வாவிற்குப் பதிலாகவே சந்திரா பெர்னாண்டோ பொலிஸ்மா அதிபராகப் பதவி ஏற்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதற்கான கடிதத்தைப் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னான்டோவிற்கு அனுப்பியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (க)

வீதி விபத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இரட்டைச் சில்லு உழவு இயந்திரம் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் குறுக்கே சென்றதால் அவ்வீதியூடாக மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளின் முன்பகுதியும் சிறு சேதத்திற்குள்ளாகியது. (ற-47)

தோட்டப்புற இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும்

ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளின்படி ஆயிரம் தோட்டப்புற இளைஞர், யுவதிகளுக்கு அரச துறையில் வேலைவாய்ப்புகளை வழங்கவேண்டும்மென்றுகோரி இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் செயலாளர் கணபதி கனகராஜ் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மலையக மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. அதனடிப்படையில் கடந்த இரண்டு மாதங்களாக வேலைவாய்ப்பு வழங்குவதாகக்கூறி நேர்முகப் பரீட்சைகளும் நடத்தப்பட்டன.

எனினும், 30 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு காட்டிய முனைப்பை மலையக தோட்டப்புற இளைஞர், யுவதிகளின் விடயத்தில் அரசாங்கம் காட்டவில்லை.

எனவே, விரைவில் 3 ஆயிரம் தோட்டப்புற இளைஞர் யுவதிகளுக்கு அரசதுறைகளில் வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் எனவும் அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-8)

6 மாவீரர்களின் உருவப்படங்கள் திரைநீக்கம் செய்யப்பட்டன

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்டத்தில் 1995, 1996, 1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் வீரச்சாவடைந்த 6 மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வடமராட்சி எல்லங்குளம் மாவீரர் மயானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை திரைநீக்கம் செய்யப்பட்டன.

மாவீரர்களான லெப்.கேணல் அருச்சுனா, கப்டன் வருணன், லெப்டினன்ட் நீலவண்ணன், மேஜர் இளஞ்செழியன், கப்டன் உதயராசன், 2 ஆம் லெப் மகேந்திரம் ஆகியோரின் திருவுருவப் படங்களே திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

வடமராட்சி மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பாஸ்கரன தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றிவைக்க, மாவீரர்களின் படங்களுக்கு மாவீரர்களின் பெற்றோர் நினைவுச்சுடர் ஏற்றி வைத்தனர்.

இந் நிகழ்வில் கடற்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அருணன், யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், வடமராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் வி.தயா, கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன், கடற்புலிகளின் வடமராட்சி மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கல்யாணி மற்றும் சிவாஜிலிங்கம் எம்.பி ஆகியோரும் கலந்துகொண்டனர். (ற-121,43)

சமாதான நடவடிக்கைகளைத் தாமதமாக்கவே தேசிய ஆலோசனை சபை என்கிறது ஐ.தே.கட்சி

(கொழும்பு)

சமாதானம் நல்லிணக்கம் ஆகியவற்றிற்கான தேசிய ஆலோசனைச் சபை சமாதான நடவடிக்கைகளை மேலும் தாமதமாக்க பயன்படுத்தும் யுக்தி என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்நிலையில் தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி கலந்துகொள்ளாது என்று அதன பிரதிச் செயலாளரான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க தமது கட்சி பூரண ஆதரவை வழங்குமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் முதலில் அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இணக்கம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்ட பின்னரே இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடாத்தலாமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-7)

ஓம் திசைரி தியானம்

விவேகச் சிந்தனைகள்

நங்கள் எப்படி அழைத்தாலும் சரி இந்தப் பிரபஞ்சம் அல்லது இயற்கை எல்லைக்கு உட்பட்டதாகத் தான் இருக்கு வேண்டும். எல்லையற்றதாக இருக்க முடியாது. பரம்பொருள் இயற்கையாக மாறவேண்டுமானால் அது காலம் இடம் காரண காரியம் இவற்றால் கட்டுப்படவேண்டும். நம்மிடம் உள்ள சக்தி எல்லைக்கு உட்பட்டது. நீங்கள் அதை ஓர் இடத்தில் பயன்படுத்தலாம் இன்னோர் இடத்தில் இழக்கலாம். ஆனால் மொத்தச் சக்தி என்னவோ எப்போதும் ஒன்றுதான்.

சுவாமி விவேகானந்தர்

மகளிர் சங்கம நிகழ்வு நேற்று நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மகளிர் அமைப்புக்களின் சங்கம நிகழ்வு நேற்றுக்காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

முன்பள்ளி இணைப்பாளர் கணபதிப் பிள்ளை வசந்தகுமாரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொதுச் சுடரினை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், இலங்கை வலைபந்தாட்ட சங்க உப தலைவர் திருமதி ரூபசிங்கம், வண.பிதா ராஜரட்ணம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியினை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி தமிழினி ஏற்றிவைத்தார். ஈகச்சுடரினை மாவீரர் கவிதரனின் சகோதரி ஏற்றிவைத்தார்.

2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் உருவப் படத்திற்கு தமிழத்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் மலர்மாலை அணிவித்தார்.

யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், வண பிதா ராஜரட்ணம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

(த-19)

ஆலோசனைச் சபையை ஐ.தே.கட்சி...

இன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ள சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைசபைக் கூட்டத்தில் தாம் பங்குபற்றப்போவதில்லையென தெரிவித்து எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியிருந்தார். ரணில் விக்கிரமசிங்கவின் கடிதத்திற்குரிய பதில் க்டிதத்திலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கவலை வெளியிட்டுள்ளார்,

அக்கடிதத்தில் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைச்சபைக் கூட்டத்தில் பங்குகொள்வதில்லை என்று தாங்கள் எடுத்திருந்த தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தாங்கள் மேற்கொண்டுள்ள முடிவை மீள்பரிசீலனை செய்வதற்கு பின்வரும் 3 காரணங்களையும் சமர்ப்பிக்கின்றேன்.

முதலாவதாக தாங்கள் எனக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது, இடைக்கால அதிகாரசபை ஒன்றை உருவாக்கும் நோக்கில் தமிழீழ விடுதலை புலிகளை காத்திரமான முறையில் பேச்சுவார்த்தையில் ஈடுபடச்செய்வதற்கு எமது அரசாங்கம் முனையவில்லை என்று குற்றம சாட்டியுள்ளீர்கள்.

இவ்விடயம் தொடர்பாக விசாரணைகளைமேற்கொண்டாலும் கூட நிரந்தரத் தீர்வொன்றை காணவேண்டுமானால் பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு விடயங்களையும் ஆராயவேண்டியிருக்கும்.

இரண்டாவதாக தங்கள் தலைமையிலான ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போது 2003 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பேச்சுவார்த்தையை இடைநிறுத்தி வெளியேறிய விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை தொடர்வதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளையும் தங்களால்முன் வைக்கப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி அரசின் யோசனைகள்

ஆலோசனைச்...

என அறிவித்துள்ளன.

பேச்சுவார்த்தை ஆரம்பிக்காமல் இவ்வாறான ஆலோசனைசபை அமைப்பது காலம்தாழ்த்தும் செயலென இந்தக் கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.

நிபந்தனையற்றவிதத்தில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த எடுக்கும் தீர்மானத்தினை எதிர்ப்பதுடன் குறிப்பிட்ட ஆலோசனைசபைக்கு தமது ஆதரவினை வழங்கப் போவதில்லையென ஜாதிகஹெல உறுமய தெரிவித்துள்ளது. (த-8)

தொடர்பாகவும் விடுதலைப்புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துமாறு தாங்கள் கோரியுள்ளீர்கள். இன்றைய சூழ்நிலையில் தேசிய ஆலோசனை சபையின் கூட்டம் அவசியம் இல்லை என்பதைக் கூட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய நீங்களும், ஐக்கிய தேசியக் கட்சியும் கலந்துகொள்ளப்போவதில்லை என்று அறிவித்துள்ளீர்கள்.

தங்களது தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் யோசனைகளை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிரபாகரனும் நிராகரித்திருந்தமையை தங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்பட்ட யோசனைகளிலிருந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு தாங்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். இது எவ்வளவு தூரம் நடைமுறைச் சாத்தியமானது. மேலும் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெறும்போது அதன் பெறுபேறுகளை நாட்டிற்கும், நாட்டுமக்களுக்கும் தெளிவுபடுத்துவதே இந்த ஆலோசனை சபையின் நோக்கம் என்றும் ஜனாதிபதி அக்கடிதத்தில் தெளிவுபடுத்தியுள்ளார். (ம)

ஜனாதிபதியின்...

இதற்காக அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு முன்னர் ஜனாதிபதியுடனான சந்திப்பொன்றிற்கு வாய்ப்பு வழங்கவேண்டுமென நாம் கேட்டிருந்தோம். எனினும், இதுதொடர்பாக ஜனாதிபதியின் தரப்பிலிருந்து இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (த-121)

படையினர்....

திரண்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு, பொறுப்பதிகாரிக்கு மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இது தொடர்பாக குறித்த படையினரை படைமுகாம் பகுதியிலிருந்து உடனடியாக அழைத்த அதிகாரி, அவர்கள் மதுபோதையில் இருந்ததாகவும், விசாரணைகளின் பின் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். (121)

கொழும்பு...

அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பணநெருக்கடியில் மூழ்கியுள்ள ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இந்த நெருக்கடியில் இருந்து தப்பிப்பிழைக்கவே அவசர அவசரமாக இத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப் படுத்த தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது (த-6)

வட-கிழக்கு....

கள் குழுவினர் நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

சுவிஸ் நேரப்படி நேற்றுக்காலை 9 மணிக்கு இடம்பெற்ற இக்கலந்துரையாடலின்போது தமிழர் தாயகப் பகுதியில் இடம்பெற்ற மனிதஉரிமைகள் மீறல்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை, நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடன் நேற்று முற்பகல் முதல் மாலைவரை நீண்ட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

ஜனாதிபதியின் ஆலோச...

கப்படுகின்றது. இந்த கூட்டத்தில் கலந்துகொள்வதில்லையென ஐக்கிய தேசிய கட்சியும் தமிழ்கூட்டமைப்பும் தீர்மானித்துள்ளன.

இக்கூட்டத்திற்கு அரச சார்பற்ற நிறுவனங்களும், சமயத்தலைவர்களும் கூட அழைக்கப்பட்டுள்ளனர். ஜே.வி.பி, சிறிலங்கா சுதந்திரகட்சி ஆகியகட்சிகள் இதில் பங்கு பெறவுள்ளன. இக்கூட்டத்தில் பங்குபற்ற இ.தொ.கா. ஏற்கனவே மூன்று உறுப்பினர்களை சிபார்சு செய்திருந்தது. இறுதிநேரத்தில் இக்கூட்டத்தில் கலந்துகொள்வதில்லையென தீர்மானிததிருக்கின்றது. (த)

பதவி வெற்றிடம்

↕பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

யாழ். நகரப் பகுதியிலிருந்து 10 கி.மீ. தூரத்துக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தகுதி உடையவர்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்

வலம்புரி
இல.15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

நாவலர் வீதியைச் சேர்ந்த
ஜெயபாலசிங்கம் - மதிவதனா
தம்பதிகளின் செல்வப்புதல்வன்
(யாம். சென் பெனடிக்ற் றோ.க.வித்தியாலய மாணவன்)

செல்வன் ஜெ.ஜனரூபன்

அவர்கள் 5 ஆம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு (132 புள்ளிகள்) ஆரை மனமார வாழ்த்துவதுடன், அவர் தொடர்ந்தும் வெற்றிபெற எமது நல்லாசிகளைத் தெரிவிப்பதுடன் அவர் சித்திபெற ஊக்கமளித்து வழி காட்டிய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

பாராட்டுபவர்கள்: அம்மம்மா, அப்பப்பா, ஆயா, மாமாமார், சித்தி, சித்தப்பா, (வெளிநாட்டிலுள்ள) அண்ணன்மார், சித்திமார், அக்காமார், அத்தான்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார்.

தகவல்: கூட்டுறவு ஊழிய நண்பர்கள்
(மன்ற நண்பர்கள்)

(C/606)

திறப்பு விழா அழைப்பிதழ்

கமநல சேவைகள் நிலையம்

காரைநகர் 04.10.2004

காரைநகர் வலந்தலைச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட காரைநகர் பிரதேசத்திற்கான கமநல சேவைகள் நிலையக் கட்டடம் 04.10.2004 இன்று (திங்கட்கிழமை) காலை 11.00 மணியளவில் யாழ். மாவட்ட அரச அதிபர் உயர்திரு. செல்லையா பத்மநாதன் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மற்றும் பிரதேச செயலக உயர் அதிகாரிகள், யாழ். கமநல சேவைகள் நிலைய உயர் அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் அனைரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

வலந்தலை
காரைநகர்

கமநல சேவைகள் நிலையம்
காரைநகர்

(C/605)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.10.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.